Registered as a news paper.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை
எக்ஸ்போ எயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 10 (02.03.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :153

## ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் நோர்வே அனுசரணையுடன் பேச்சு!

### ஜனாதிபதி சந்திரிகா பேட்டி



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்குவந்தால் இடைநிறுத்தப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சி மீளத் தொடரப்படுமெனவும், இதற்கு நோர்வேயின் அனுசரணையும் பெற்றுக்கொள்ளப்படும்

இவ்வாறு இந்தியாவிலிருந்து வெளிவரும் ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

தேர்தலில் வென்றபின்னர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள பலவீனமான சில விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு விடுதலைப் புலிகள் விரும்பினால் நான் அதற்குத் தயாராகவுள்ளேன்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் நாட்டில் யுத்தம் வெடிக்குமென பிரதமர் மக்களுக்கு அச்சமூட்டுகிறார்

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சாடுகிறது

கூட்டமைப்பு ஆட்சிபீடம் ஏறினால் மீண்டும் யுத்தம் தொடர்வதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாக பிரதமமந்திரி தெரிவித்த கருத்துக்கள் மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை குறைத்து மதிப்பிடுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

மீண்டும் போர் தொடுக்கும் எண்ணம் இல்லை என்று விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். மக்களும் யுத்தத்தை விரும்பவில்லை. சமாதானத்தை நாடுகின்றனர். தேசிய நெருக்கடிகளுக்கு அரசில் தீர்வு காண்பதையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது என்று அதன் பொதுச் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை திரும்பி ஒப்படைக்காதுவிடில் சமாதான முயற்சியினை மீண்டும் தொடக்க முடியாது என்று பிரதமர் கூறினாலும், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்ததை பிரதமர் மறுக்க முடியுமா?

கிழக்கில் வன்முறைச் சம்பவங்கள் நிறைந்திருப்பதுடன், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற பின்னர் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

தற்போதைய தலைவர்கள் மிகவும் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார். (01)

# ஆட்சியைக் கைப்பற்றினால் புலிகளுடன் மட்டுமே பேச்சு!

## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றினால், அந்த அரசாங்கத்துக்குக் கீழே நடாத்தப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விடுதலைப் புலிகளுடன் மட்டுமே நடாத்தப்படும் என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.**

**கொழும்பு ஆங்கிலவார இதழான 'சண்டே லீட'ருக்கு அவர் இவ்வாறுதெரிவித்ததாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.**

ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை தொடர்பாக கலந்தாலோசித்தாலும், பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப் புலிகள் மட்டுமே இடம்பெறுவர்.

விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆனாலும், பேச்சுவார்த்தைகள் அவர்களுடன் மட்டுமே நடாத்தப்படும். பேச்சுவார்த்தையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் குறித்து ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் அறியத்தரப்படும்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## இரு ஐ.தே.க. வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகினர்!

(மட்டக்களப்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களில் இருவர் தாம் போட்டியிலிருந்து விலகுவதாக தேர்தல் ஆணையாளருக்கு நேற்று கடிதம் அனுப்பியுள்ளனர்.

காசிபதி பூபாலரத்தினம், அமரசிங்கம்-விநாயகமூர்த்தி ஆகிய இருவருமே தாம் எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் மட்டுமே பேச்சு என்ற

## ஜனக பெரேரா மீது

விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் அறியத்தரப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் மட்டுமே பேச்சு என்ற கதிர்காமர் கருத்துக்கு கண்டனம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தால், இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில், விடுதலைப் புலிகளுடன் மட்டுமே தனியாக பேச்சு நடாத்தப்படும் என்று லக்ஷ்மன் கதிர்காமர் சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி, சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கியுள்ள ஈ.பி.டி.பி., ஆனந்தசங்கரியின் கட்சி ஆகியன உட்பட இதர முஸ்லிம் கட்சிகளும், சிறிய இடதுசாரிக் கட்சிகளும், சில பௌத்த அமைப்புக்களும், ஏனைய சிங்கள இனவாத அமைப்புக்களும் கதிர்காமரின் இந்தக் கருத்தை வன்மையாகக் கண்டித்துள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில்

# ஐ.தே.கட்சி வேட்பாளர் மீண்டும் சுடப்பட்டு மரணம்!

(மட்டக்களப்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் மீது இரண்டாவது தடவையாக இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தின் வேட்பாளரான சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை (வயது 63) ஆரையம்பதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த சனியன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்திருந்தார்.

காயமடைந்த இவர் மட்டக்களப்பு போதனா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனக பெரேரா மீது விசாரணை நடத்துக!

## அன்னையர் முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

முன்னாள் வடபகுதி இராணுவத்தளபதி ஜனக பெரேராவை விசாரணைக்குட்படுத்துமாறு தெரிவித்து அன்னையர் முன்னணியினர் நேற்று யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன் மறியறபோராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

1995 ஆம் ஆண்டிலும் 1996 ஆம் ஆண்டிலும் யாழ்.மாவட்டத்தில் இளைஞர்கள் காணாமற்போனமைக்கு அப்போதைய இராணுவத் தளபதியான ஜனகபெரேராவே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அவர் மீது இதுவரையில் எந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை ஆகிய மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்று அவற்றின் அடிப்படையில் தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்றும் -

புலிகளுடன் விரைவாகப் பேச்சு நடத்தி இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபையை நிறுவவேண்டும் என்பதையும் -

உயர் பாதுகாப்பு வலங்களை அகற்றி தமிழ்மக்கள் சொந்த இடங்களில் வாழ அனு

(12 ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்மக்களின் அரசியல் உரிமையை வலுப்படுத்த அனைவரும் ஒரே கொடியின்கீழ் ஒன்றுபட்டு நிற்போம்!

## நேற்று வெளியிடப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முழு விபரமும் வருமாறு

அன்புக்குரிய தமிழ்பேசும் சகோதர, சகோதரிகளே!

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 05 ஆம் நாள் நடைபெற்ற கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், இரண்டு ஆண்டுகளே கழிந்த நிலையில், இருபெரும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்குமிடையே தொடர்ந்து கொண்டிருக்கும் அதிகாரப் போட்டியின் விளைவாக மீண்டும் ஒரு பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமைக்குத் தமிழ்தேசிய இனம் தள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும் இலங்கையில் இப்போது நிலவிக்கொண்டிருக்கும் அரசியற் சூழ்நிலையினதும், சர்வதேச அரங்கில் எமது விடுதலைப் போராட்டத்திற்குச் சாதகமாக உருவாகிவரும் மாற்றங்களினதும் பின்னணியில் எம்மினத்தின் சுயநிர்ணய உரிமைத் தீர்மானத்தை உலகறிய மீணடும் வலியுறுத்தக் கிடைத்த ஓர் வரலாற்றுச் சந்தர்ப்பமாக இத்தேர்தலைப் பயன்படுத்தத் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுதி பூண்டுள்ளது.

வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கைத் தீவில் தனக்கெனத் தனியானதோர் மரபுவழித் தாயகத்தையும், அதில் இறைமையையும், ஆட்சி உரிமையையும், தன்வசம் கொண்டிருந்த தமிழ்த் தேசியஇனம், ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களிடம் முதலில் தன் இறைமையை இழந்தது, பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1833 இல் முழு இலங்கைத் தீவும் ஒரே அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டபோது, தமிழ்த் தேசிய இனத்தின் அங்கீகாரமின்றி ஆங்கிலேய மேலாதிக்கத்தால் தமிழர் தாயகம் சிங்கள தேசத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது.

பின்னர் 1984 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி - ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இலங்கைத்தீவைவிட்டு வெளியேறியவேளையில், தமிழ் தேசிய இனத்தின் தரப்பில் முன்வைக்கப்பட்ட அனைத்து அரசியல் கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டு, சிங்களதேசத்தின் தயவில் தமிழ்த் தேசிய இனத்தின் தலைவிதி தங்கியிருக்க வேண்டிய நிலைமைக்கு வழியமைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நிலப்பறிப்பு, குடியுரிமைப்பறிப்பு, வாக்குரிமைப்பறிப்பு, மொழியுரிமைப்பறிப்பு மற்றும் கல்வி, தொழில், பண்பாடு போன்றவற்றில் ஏற்படுத்தப்பட்ட இனரீதியான பாரபட்ச நடவடிக்கைகள் ஆகியவற்றினால் தமிழ் இனத்தின் தனித்துவத்திற்கும், வாழ்விறகும் விடுக்கப்பட்ட இன அழிப்பு அச்சுறுத்தலின் விளைவாக எமது மரபுவழித் தாயகத்தில் எமது விவகாரங்களை நாமே நிர்வகிக்க வேண்டும் என்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் பேரிலும், தமிழ் இனத்தின் சார்பில் இலங்கை தமிழரசுக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட அகிம்சை வழிப்போராட்டங்கள் சிங்கள அரசுகளினால் ஆயுதமுனையில் அடக்கப்பட்டன. 1957 ஆம் ஆண்டிலிருந்து காலத்திற்குக்காலம் தமிழினத் தலைவர்கள் சிங்களப் பேரினவாத ஆட்சியாளரோடு செய்து கொண்ட அரசியல் ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டன.

தொடர்ந்து, பாதுகாப்பற்ற தமிழ்மக்கள் மீது 1956, 1958 ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட அரச வன்முறை ஏவிவிடப்பட்டது. 1972 இல் தமிழ் இனத்தின் பிரதிநிதிகளின் எதிர்ப்புக்கு மத்தியிற் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களினால் நிறைவேற்றப்பட்ட ஒற்றை ஆட்சிமுறையிலான குடியரசு அரசியற் சாசனத்தினால் தமிழ இனத்தின் உரிமைகள் அனைத்தும் ஒட்டு மொத்தமாக மறுக்கப்பட்ட நிலையில் தமிழ் இனத்தரப்பில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டிய வரலாற்றுக் கட்டாயம் ஏற்பட்டது.

இந்த அரசியற் சூழ்நிலையில் தமிழரின் அரசியல் அமைப்புக்கள் ஒன்றிணைந்து 1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் நாள் தமிழத் தேசிய இனததிற்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முழுமையான இறைமை கொண்ட சுதந்திரத் தமிழழ அரசை நிறுவுவதெனத் தீர்மானித்தன.

1977ஆம் ஆண்டு ஆடி மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் - தமிழீழ இலட்சியத்தை முன்வைத்துப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அமோகமான ஆதரவை தமிழினத்தின் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்கள் அளித்ததன் மூலம் சுதந்திரத் தமிழீழத்திற்கான ஆணை வழங்கப்பட்டது.

சுதந்திரத் தமிழீழத்திற்கான ஆணைக்குப் பதிலடியாக உடனடியாகவே சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களினால் இனப்படுகொலை தாக்குதல்கள் தமிழினத்தின்மீது கட்டவிழ்த்து விடப்பட்டதோடு, அடுத்த ஆண்டில் (1978 இல்) ஒற்றையாட்சி முறையை மேலும் வலுப்படுத்தி, இரண்டாவது குடியரசு சாசனம் தமிழ்மக்களினதும், அவர்களது பிரதிநிதிகளதும் எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து 1979 இலும், 1981 இலும் பின்னர் பாரியளவிலும் 1983 இலும் தமிழினப்படு கொலைத் தாக்குதல்கள், சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களினால் திட்டமிட்டுத் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்தச் சூழ்நிலையில் தமிழினத்தின் வாழ்வையும், தனித்துவத்தையும் பாதுகாககவும், அதன் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் ஆயுதப் போராட்டமே ஒரே வழியென்ற தவிர்க்கமுடியாத நிலைமைக்குத் தமிழ்த் தேசிய இனம் தள்ளப்பட்டு, ஆயுதப்போராட்டம் விரிவடைந்ததோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் தலைமையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தினை முறியடிப்பதற்கும், அதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளை நசுக்குவதற்கும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள பேரினவாத அரசுகளினால் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்விடைந்த நிலையில் "தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வுகாணமுடியாது, அரசியல் ரீதியாகவே அதனைத் தீர்க்க முடியும்" என்னும் மெய்நிலைக்கு சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வலியுறுத்தப்பட்ட சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் கூடிய அரசியற் பேச்சுவார்த்தைகளுக்கு அடிகோலப்பட்டது.

இவ்விதம் தமிழ்த் தேசியத்தின் வலிமை நிலைநாட்டப்பட்டிருப்பதற்கு, பல்வேறு துன்ப துயரங்களுக்கும், ஒரு லட்சம் வரையிலான உயிரிழப்புகளுக்கும் இடையே எமதுமக்கள் தொடர்ந்து காட்டிவந்திருக்கும் அர்ப்பணிப்புடன் கூடிய இலட்சியப் பற்றுறுதியும், வீரவரலாறு படைத்திருக்கும் எமது மாவீரரதும், போராளிகளினது தியாகங்களும், சாதனைகளுமே காரணம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எல்லோரும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் நாள் நள்ளிரவு தமிழீழ விடுதலைப் புலிகள் தாமாகவே முன்வந்து ஒருதலைப்பட்சமாக பிரகடனப்படுத்திய போர்நிறுத்தமும், தொடர்ந்து சிறிலங்கா அரசினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்ட நோர்வே அரசின் அனுசரணை முயற்சிகளின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த உடனபடிக்கையும் - சிறிலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுக்களுக்கு வழியமைத்தன.

இந்தப் பேச்சுக்களின்போது எட்டப்பட்ட உடன்பாடுகளின் பிரகாரம் தமிழ்மக்களுடைய அன்றாட வாழ்வில் மீண்டும் இயல்பு நிலையினை ஏற்படுத்துவதற்கு அவசியமாகவும், அவசரமாகவும் தேவைப்படும் மனிதாபிமான அடிப்படையில் அமைந்த புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு என அமைககப்பட்ட "சிரான்" உள்ளிட்ட உப அமைப்புகள் செயற்படாத காரணத்தினாலும் மேலும் எமது மக்களின் அவசியத் தேவைக்கென சர்வதேச சமூகம் உவந்தளித்த பெருந்தொகை நிதியுதவியைப் பயன்படுத்துவதற்கான அதிகாரக் கட்டமைப்பு இல்லாத காரணத்தினாலும், எமது மக்களின் அதிகரித்துவந்திருக்கும் அன்றாடத் துன்ப துயரங்களையும், அதன் விளைவாக அவர்களின் மன உணர்வுகளையும் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசிய இனத்தின் தாயகத்திற்கென "இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு" ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையினை தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்தனர்.

அந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கூட்டமைப்புக்கான தமது வரைபினை 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் நாள் நோர்வே அனுசரணையாளர்களூடாகச் சமர்ப்பித்தனர். இந்த வரைபு தொடர்பான பேச்சுவார்தைகளை ஆரம்பிப்பதற்கான நாளைக் குறிப்பிடுமாறு சிறிலங்கா அரசினை தமிழீழ விடுதலைப் புலிகள் கோரினர்.

இந்த நிலையில் போர்நிறுத்த உடன்படிக்கை நிலைத்து நிற்பதற்குக் கணிசமான அளவு ஆதாரமாக விளங்கிய பாதுகாப்பு, உள்துறை, தகவல்தொடர்பு ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களையும், தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு வரைபு வழங்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து ஆரம்பமான அரசியற் சச்சரவு, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து எதிர்வரும் 2004.04.02 ஆம் நாள் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான உத்தரவை பிரகடனப்படுத்தியதோடு முடிவுக்கு வந்தது.

இந்த நிலைமை எமது மக்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைச் சீர்குலைத்ததோடு, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியற்தீர்வு முயற்சிகளுக்கும் பாரிய பின்னடைவையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளது.

இதன் பின்னரும் சமாதான முயற்சிகளில் தமது திடமான உறுதிப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர். இதனை சர்வதேச சமூகம் அங்கீகரித்ததுடன் பாராட்டியுமுள்ளது.

தமிழீழ தேசிய இனத்தின் மரவுவழித் தாயகத்தின் நிலப்பரப்பில் 70 வீதத்தைத் தொடர்ச்சியாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து, அங்கு ஒரு அரச நிர்வாகத்திற்குச் சமனான சகல அம்சங்களையும் உள்ளடக்கிய நிர்வாகக் கட்டமைப்பை நடாத்தி ஒரு நடைமுறை அரசினைத் தம்வசம் கொண்டிருந்தபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை 2001 டிசெம்பர் 24 ஆம் திகதி பிரகடனம் செய்து தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு தமிழ்த் தேசியப் பிரச்சினை தொடர்பாக அரசியல் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொண்டிருந்தார்கள் என்பதை சகலரும் உணர்ந்துகொள்ளவேண்டும் என்று நாம் கருதுகின்றோம். எனவேதான் சீர்குலைந்திருக்கும் அரசியற்தீர்வு முயற்சிகளை ஆக்கபூர்வமாகவும், ஆரோக்கியமாகவும் மீண்டும் முன்னெடுக்கும் விதத்திற் சிங்களதேசமும் தமது பங்களிப்பை வழங்குமென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.

**இதனடிப்படையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பின்வரும் தீர்மானங்களை முன்வைக்கின்றது.**

தமிழ்த்தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை (சுயநிர்ணயவுரிமை) ஆகிய மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்று, அவற்றின் அடிப்படையில் தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்படவேண்டும்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியற் தீர்வில் முஸ்லிம் மக்கள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவானதும், திட்டவட்டமானதுமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. தமிழர்களைப் போலவே முஸ்லிம்களும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்கள் என்ற வகையிலும், எமது தாயகத்தில் தமிழர்களுடன் இணைந்து வாழ்ந்துவந்திருப்பவர்கள் என்ற அடிப்படையிலும், தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் மக்களின் தனித்துவம், பாதுகாப்பு, பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான விடயங்களும், அம்சங்களும் உள்ளடக்கப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதிபூண்டுள்ளது. இந்த வகையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிககப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான பிரேரணையில் முஸ்லிம்கள் தொடர்பான அம்சங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையில் தங்களின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் பங்குபற்றும் உரிமை முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு உண்டென தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம் சமூகத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையில் இடம்பெறுவார்கள் என அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இந்தப் பின்னணியில் ஒரு பொதுவான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் தமிழர்களுடன் முஸ்லிம் சகோதரர்களும் இணைந்துகொள்வார்கள் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை கொண்டுள்ளது.

இருபது ஆண்டுகாலமாக நீடித்த போரினால் அழிந்துபோன தமிழ்த் தேசத்தையும், சிதைந்துபோன தமிழர் வாழ்வையும் மீளக்கட்டியெழுப்பி, தமிழ்மக்கள் நாள்தோறும் எதிர்கொள்ளும் பூதாகாரமான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, தமிழ் மக்களது வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்காக மக்கள் நலனை மையப்படுத்தி, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, சட்ட ஆட்சிக்கு அமைவாக நடைமுறைக்குச் சாத்தியமான முறையில் தமிழ்மக்கள் சார்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான ஆலோசனையை சிங்கள சேதம் முழுமையாக ஏற்று, தமிழீழ விடுதலைப் புலிகளோடு விரைவாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை நிறுவவேண்டும்.

மக்களின் நலன்களைப் புறந்தள்ளி போரியல் நலன்களுக்கு முதன்மைகொடுத்து அநீதியான முறையில் தமிழர் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களும், இராணுவ முகாம்களும், அகற்றப்பட்டு, இராணுவ நெருக்குதல்கள் அற்ற நிலையில் தமிழ்மக்கள் தமது சொநத வாழ்விடங்களுக்கு உடனடியாகத் திரும்பிச்சென்று குடியமர ஏற்பாடுகள் செய்ப்படவேண்டும்.

தமிழர் தாயகத்தில் தமிழ்மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் நடமாடி, தரையிலும் கடலிலும் தமது வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்டுள்ள இராணுவ அழுத்தங்களும் தடைகளும் முற்றாக அகற்றப்படவேண்டும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை காத்திராது, மக்களை அழுத்திக்கொண்டிக்கும் அவசர மனிதாபிமானத் தேவைகளுக்கும், மற்றும் பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நேரடியாக உதவிகளை வழங்கி, தமிழ்த் தேசத்தின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தச் சர்வதேச சமூகம் உதவவேண்டும்.

நியாயமற்ற முறையில் ஆண்டுக்கணக்காகச் சிறிலங்காவின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியற் கைதிகள் அனைவரும் விரைவாக விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழர் தாயகப்பிரதேசங்களில் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் கைது செய்யப்பட்டுக காணமற்போன அப்பாவி மக்களின் நிலையை என்னவென அறியாது பல்லாண்டுகளாகப் பெரும் துன்பதுயரங்களைச் சுமந்து வாழும் அவர்களது உறவுகளுக்கும், எமது மக்களுக்கும் நீதி கிடைப்பதற்காக ஒரு நீதியான சர்வதேச விசாரணை நடாத்தப்பட்டு உறுதியான தீர்ப்பு வழங்கப்படவேண்டும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளும், கடப்பாடுகளும் முழுமையாக நிறைவேற்றப்பட்டுத் தமிழர் தாயகத்தில் பூரணமான அமைதி நிலையும் இயல்பு நிலையும் ஏற்படுத்தப்படவேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆயுதப்படைகளின் அடாவடித்தனங்களைச் சகித்துக்கொண்டும், சமாதானச் சூழலுக்கு எதுவித பங்கமும் ஏற்படாதவாறு போர்நிறுத்தத்தை இறுக்கமாகவும் உறுதியாகவும் கடைப்பிடித்துக்கொண்டும், சமாதான வழிமுறையில் ஆழமான பற்றுறுதியுடனும், உறுதிப்பாட்டுடனும் விடுதலைப்புலிகள் செயற்பட்டு வருகின்றனர். எனவே தமிழ் மக்களின் உண்மையான ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சிலநாடுகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்திவரும் தடையை நீக்கி, அவர்கள் கௌரவமாகவும், சமநிலையிலும் அதிகாரபூர்வமாகவும் சிறிலங்கா அரசுடன் பேச்சு நடாத்துவதற்கான சூழலை சர்வதேச சமூகம் உருவாக்கவேண்டும்.

**மேற்சொல்லப்பட்ட தீர்மானங்களைப் பூரணமாக செயல்வடிவில் சாதிக்கும் நோக்கத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் -**

★ தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையை தமிழ் மக்களின் தேசியத் தலைமையாகவும், விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்களின் உண்மையான ஏகப்பிரதிநிதிகளாகவும் ஏற்று, தமிழ் தேசிய இனத்தின் சார்பிலான விடுதலைப் புலிகளின் போராட்ட இலட்சியத்திற்கு நேர்மையாகவும் உறுதியாகவும் முழு ஒத்துழைப்பையும் நல்குவோம்.

★ தமிழீழ மக்களது சுதந்திரமான, கௌரவமான, நீதியான வாழ்விற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையின் கீழ் தமிழ் மக்களை சாதி, மத பேதங்களுக்கு அப்பால் ஒரே அணியில், ஒரே தேசமாக அணிதிரட்டி உறுதியாக உழைப்போம்.

★ தமிழ்பேசும் மக்களது பாதுகாப்பிற்காகவும், சுதந்திரமான வாழ்விற்காவும் போராடி வரும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அதன் தலைமைத்துவத்தின் அரசியல் போராட்ட முன்னெடுப்புகளுக்கும் உறுதுணையாக இருந்து செயற்படுவோம்.

தமிழ்த்தேசிய இனத்தின் கோரிக்கைகள் தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டு, நியாயபூர்வமான அரசியல்தீர்வு மறுக்கப்பட்டு. இராணுவ ஆக்கிரமிப்பும், அரச அடக்குமுறையும், மீண்டும் தொடருமானால், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழர் தாயகத்தில் தமிழரின் இறைமையும் சுதந்திரமும் நிலைநிறுத்தப்படுவது தவிர்க்கப்படமுடியாத யதார்த்தமாகிவிடும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

கௌரவத்துடன் கூடிய அமைதியான வாழ்வினை நாடிநிற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரிகளாகவும், சிங்களப் பேரினவாத சக்திகளின் எடுபிடிகளாகவும் எம்மத்தியில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சுயநல சந்தர்ப்பவாதக் குழுக்களை தமிழ்மக்கள் அடையாளங்கண்டு, எதிர்வரும் தேர்தலில் அவர்களை ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டுமென எமது மக்களை நாம் வேண்டிநிற்கின்றோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளை வலியுறுத்தி அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் பிரகடனப்படுத்தி, தமிழ்த் தேசயத்தை மேலும் பலப்படுத்தித் தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகளைவென்றெடுக்க ஒரே கொடியின்கீழ் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த தேசியக் கூட்டமைப்புக்குத் தமது அமோக ஆதரவை வழங்க வேண்டுமெனத் தமிழ்பேசும் மக்களை நாம் அறைகூவி அழைக்கின்றோம்.

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

# தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கக்கூடியவாறு

# தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படுகிறதாம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும், தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கக்கூடிய வகையில் இம்முறை தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களாணை கோரவுள்ளதாக தெரியவருகிறது.

இதற்கேற்ற வகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியலமைப்பை மாற்றுவதற்கும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவதற்குமான மக்களாணை கோரப்படும் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

'அரசியலமைப்பை மாற்றுவதற்கான மக்களாணை' என்ற தலைப்பில் எதிர்வரும் பத்தாம் திகதி இந்த தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படலாம் என்றும், இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றியீட்டுமானால், அது புதிய அரசியலமைப்பை எழுதுவதற்கான மக்களாணையாகக் கருதப்பட்டு, எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் அரசியலமைப்பை மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்றும் இந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்தியா மற்றும் பிரான்ஸ் நாட்டு அரசியலமைப்பு வல்லுநர்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு, ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம், 1978 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பை மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமலே மாற்றியமைத்து, இலங்கையில் மீண்டும் வெஸ்ட் மினிஸ்டர் அவை என்றழைக்கப்படுகின்ற நாடாளுமன்ற அதிகார ஆட்சிமுறையை அறிமுகப்படுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும்,

ஜனாதிபதி நினைத்தபடி எல்லாம் சரியாக நடந்தால், தேர்தல் முடிந்து ஒருவருட காலத்துக்குள் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தி, ஜனாதிபதியை நாடாளுமன்ற உறுப்பினராக மாற்றுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளது.



இதற்கேற்ப, எவ்வித அரசியல் முக்கியத்துவமும் இல்லாதவரான ஜே.ஏ.மேரி லூசிடா என்பவர் தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், அரசியலமைப்பை மாற்றி, நாடாளுமன்ற அதிகார ஆட்சிமுறையை நடைமுறைப்படுத்தியதும், அவர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்து, ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு வழிவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், கடந்த 2001 ஆம் ஆண்டுத் தேர்தலைப் போன்று, இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிரதம வேட்பாளராக எவரது பெயரையும் குறிப்பிடவில்லை எனவும், இதன் நோக்கம், ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றதும், அவரைப் பிரதமராக்குவதே என்றும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைச் செய்தி மேலும் கூறுகிறது.

## தபால்மூல வாக்களிப்பு ; விண்ணப்பம் நேற்று முடிவு

தபால் மூலமான வாக்களிப்பு செய்வதற்கு விண்ணப்பிக்கும் இறுதித்தினம் நேற்றுடன் முடிவடைந்ததாகத் தெரியவருகிறது.

நாட்டில் 2 லட்சத்து ஐம்பதாயிரம் பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருக்கிறார்கள் என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நீலகம தோட்ட குடியிருப்புக்கள் மீது தாக்குதல்

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சாவந்த நீலகம தோட்ட குடியிருப்புக்கள் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதலுக்கு உள்ளாகின.

சாவந்த - நீலகம பகுதியின் லயன் குடியிருப்புக்களிலுள்ள ஐந்து வீடுகளே தாக்குதலுக்கு இலக்காகின.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த லயன் குடியிருப்புக்கள் தாக்கப்பட்டமை, அரசியல் பின்னணியுடன் நடைபெற்ற வன்முறையாக இருக்கலாமென சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

(01)

## தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாமை

# மாற்றுக்கொள்கை நிலையம் கவனத்தில் எடுத்துள்ளதாம் !

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் - தேர்தல் ஆணைக்குழு ஒனறை அமைக்கத் தவறியமை தொடர்பாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் எடுத்துள்ளது.

இவ்வாறு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி - சரவணமுத்து மற்றும் சட்டப் பணிப்பாளர் றொகான் எதிரிசிங்க இருவரும் அரசியல் யாப்பு சபைக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

17 ஆவது அரசியல் யாப்பின் நிகழ்ச்சித்திட்டப்படி, அவசியமான இதனை அமுல்படுத்தாமல் விட்டதனை, மாற்றுக்கொள்கை நிலையம் ஆழமானமுறையில் கவனத்தில் எடுத்துள்ளது.

அரசியல் சபைக்கு ஜனாதிபதி சிபார்சு செய்வதன்மூலம், தேர்தல் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கவேண்டும் எனவும் அந்த நிலையம் கேட்டுள்ளது.

## தேர்தல் தொடர்பான

# சுவரொட்டிகள், கட் அவுட்டுக்கள் அகற்ற பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு, பிரசார தேவைகளுக்காக ஒட்டப்படும் சுவரொட்டிகள் மற்றும் கட் அவுட்டுக்கள் ஆகியவற்றை அகற்றும் நடவடிக்கைகளை பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர்.

இதற்காகவென 8.2 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென விசேட பொலிஸ் அணிகளும், வேலையாட்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான பொலிஸ் பிரிவின் உதவி அத்தியட்சகர் ஜயந்த விக்ரமரத்ன தெரிவித்தார்.

வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்தவுடனேயே, தாம் இந்தப் பணிகளை ஆரம்பித்து விட்டதாகத் தெரிவிக்கும் பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த விக்ரமரத்ன, இந்தப் பணிகளுக்காக விசேட விடியோ பொலிஸ் பிரிவொன்றும் அமைக்கப்பட்டுள்ளதாகவும்,

இந்தப் பிரிவினர், வீதிகளில் பயணம் செய்து தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள், கட் அவுட்கள் பற்றிய விபரங்களைப் படப்பிடிப்புச் செய்வார்கள் எனவும், பின்னர் இவை அகற்றப்பட்ட நடவடிக்கைகளையும் அவர்கள் படம் பிடித்து தம்மிடம் கையளிப்பார்கள் என்றும்,

இதன்மூலம், இந்த நடவடிக்கைகளில் முறைகேடுகள், ஊழல்கள் இடம் பெறுவதையோ, கட்சி சார்பான பொலிஸாரின் நடவடிக்கைகள் இடம்பெறுவதையோ தடுத்து நிறுத்தமுடியும் எனவும் குறிப்பிட்ட அவர், இந்த விடயத்தில் யாராவது பொலிஸ் அதிகாரிகள் தவறிழைத்தால் புதிதாக ஒருவரை அந்தப் பணிக்கு அமர்த்துமாறு பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா தமக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# தேசியபட்டியலில் ரட்ணசிறி; புதிதாக சட்டச் சிக்கல்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவைச் சேர்க்கும் விவகாரம் சட்டச் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியபட்டியல் தயாரிக்கப்படும்போது, ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் பெயர் தவிர்க்கப்பட்டதையடுத்து, அவர் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகத் தீர்மானித்ததால், அவரது பெயரை தேசியபட்டியலில் முதலாவது பெயராகச் சேர்த்துக் கொள்ள ஜனாதிபதி சம்மதித்திருந்தார்.

ஆனாலும், அரசியலமைப்பின் 99 (ஆ) பிரிவின்படி, இனிமேல் தேசியப் பட்டியலில் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் பெயரைச் சேர்ப்பது சாத்தியமில்லை எனச் சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்கனவே தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிலிருந்தோ அன்றி, தேர்தலில் போட்டியிடுவதற்கான மாவட்டரீதியான வேட்பாளர் பட்டியல்களிலிருந்தோதான் தேசியபட்டியல் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள முடியுமென அரசியலமைப்பின் 99 (ஆ) பிரிவு தெளிவாகக் கூறுகிறது.

அல்லது ஏற்கனவே தேசியப் பட்டியிலில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒருவர் தமது பதவியை இராஜினாமாச் செய்து, ரத்னசிறி விக்கிரமநாயக்காவுக்கு வழிவிட்டுக் கொடுக்கவேண்டும் என அரசியலமைப்பின் 99 (ஆ) பிரிவு கூறுகிறது.

இத்தகைய நெருக்கடியான நிலைமையால், ரட்ணசிறி விக்கிரமநாயாகவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடத்துக்கும் இடையே கசப்புணர்வுகள் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 17 முக்கிய உறுப்பினர்கள், இம்முறை தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடப்போவதாக, ஜனாதிபதிக்குப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# புலிகளின் பகுதியில் வாக்குச்சாவடிகள்; இன்று உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்களை எந்த அடிப்படையில் அமைப்பது என்பது தொடர்பாக ஆலோசிக்கும் உயர்மட்டக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான இ.மோனகுருசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

மாவட்ட செயல கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகளும், பிரதேச செயலாளர்கள், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் 93 வாக்களிப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றை யுத்தசூனியப் பிரதேசங்களில் அமைப்பதா அல்லது கடந்த தேர்தல் போல கொத்தணி அடிப்படையில் அமைப்பதா என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

# மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்குவந்தால் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு கலைக்கப்படும்

## அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும், முதலில் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு கலைக்கப்படும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

குருநாகல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு அவர் உரையாற்றுகையில் - பொலிஸ், நீதி, நீதிமன்றம் மற்றும் மரணதண்டனை விதிப்பு என்பன ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழேயே தொடர்ந்தும் இயங்கி வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

சிறுபான்மையினரின் மனதை வெல்லும் திட்டங்களை ஜனாதிபதி கொண்டுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அமைந்ததும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும். எமது முன்னணிக் கட்சி அமைந்தால், யுத்தம் ஏற்படும் என்ற பிரசாரத்தில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன், அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவைப் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் சிறைக்கு அனுப்புவது உறுதி என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை புத்தளத்திலிருந்து வடக்குவரை இன்று விடுதலைப் புலிகளின் ஆட்சி நிலவுகிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



திருகோணமலை மாணவர் நலன்புரி நிதியக் கட்டடத்தில் நடைபெற்ற கல்வி அபிவிருத்தி திட்ட நிகழ்வை பாடசாலை அதிபர் யோகராஜா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், துரைரட்ணசிங்கம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# மேற்கிந்திய தீவுகள் கப்டனாக பிறைன் லாரா தெரிவானார்!



இங்கிலாந்து கிரிக்கெட் அணி 4 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்கு மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சென்றுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி ஜமேக்காவில் ஆரம்பமாகிறது.

இந்தப் போட்டிக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டிருக்கிறது. லாரா மீண்டும் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், பங்களாதேஷுடனான தொடருக்கும் அவர்தான் அணித் தலைவராக இருப்பார் என்று மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கட் சபை அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணி மே 28 ஆம் திகதி முதல் ஜூன் 8 ஆம் திகதி வரை 2 டெஸ்டில் விளையாடுகிறது.

இங்கிலாந்திற்கெதிரான முதல் டெஸ்டில் விளையாடும் மேற்கிந்தியத் தீவுகள் அணி விவரம் வருமாறு. - பிறைன் லாரா (அணித்தலைவர்), கால்டன், டினோ பெஸ்ட், கொலிமோர், எட்வர்ட்ஸ், கிறிஸ்கெய்ஸ், ஹிண்ட்ஸ், ஜேக்கப், டேவ் முகமது, போவல், சர்வான், சுமித், டிவிட், வாஷிங்டன்.

# பாகிஸ்தான் பயணம் குறித்து கவலைப்படத் தேவையில்லை!

## இந்திய அணித் தலைவர் கங்கூலி தெரிவிப்பு


(மும்பாய்)

பாகிஸ்தான் பயணம் குறித்து அதிகம் கவலை கொள்ளவேண்டாம் என இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் கங்கூலி கூறினார்.

இந்திய அணி பாகிஸ்தானில் 40 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து 5 ஒரு நாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளை விளையாடவுள்ளது. இந்திய அணி எதிர்வரும் 10 ஆம் திகதி புறப்பட்டுச் செல்லவுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணி கப்டன் கங்கூலி மும்பையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது -

பாகிஸ்தான் பயணம் குறித்து அதிகம் கவலைப்படுவதை நாம் நிறுத்திக் கொள்ளவேண்டும். அந்தச் சிந்தனையை மனதில் இருந்து நீக்க வேண்டும். இது ஒரு சாதாரண பயணம். 14 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு போட்டித் தொடர் நடைபெறுவதுதான் விசேடம்.



பாதுகாப்பு குறித்து சிந்திப்பதைத் தவிர்த்து ஆட்டத்தை மட்டுமே நினைக்க வேண்டும். இந்தப் பயணத்துக்கு இரு நாட்டு மக்களிடம் அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கிறது. நமது அணி சிறப்பாக ஆடி திறமையை நிரூபிக்கும் என்று நம்புகிறேன்.

சஹீர்கான், கும்ளே, அகர்கர் ஆகியோர் உடல் தகுதி பெற்று விட்டனர். கொல்கத்தாவில் நடைபெறும் பயிற்சி முகாமின்போது பந்து வீச்சு பயிற்சியாளர் நியமிக்கப்படக்கூடும்.

இந்திய அணி பயிற்சியாளர் ஜோன்ரைட் கூறுகையில் -

இந்திய அணி தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருகிறது. அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக விளையாடியதைவிட மேலும் சிறப்பாக ஆடவேண்டும்.

பாகிஸ்தான் பயணம் புதிய சவாலாகும். வெற்றியை மனதில் கொண்டு விளையாடவேண்டும். நாட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வீரர்கள் முழுத் திறனையும் வெளிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

# டெண்டுல்கரின் காருக்கென விசேட பெற்றோல் தயாரிப்பு!

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான டெண்டுல்கர், டெஸ்ட் போட்டியில் பிரட்மனின் சாதனையை சமன் செய்தமைக்காக இத்தாலியிலுள்ள பியட் நிறுவனம் பெராரி காரை பரிசாக வழங்கியது. இந்த வெளிநாட்டுக் காரால் டெண்டுல்கருக்கு பல்வேறு சிக்கல்கள் இருந்தன.

வரி விலக்கு உட்பட பல்வேறு சிக்கல்களில் இருந்து மீண்ட இவர், இன்னும் காரை உபயோகிக்காமல் உள்ளார். இந்நிலையில், டெண்டுல்கரின் பெராரி காருக்காக இந்தியாவிலுள்ள பெற்றோலிய நிறுவனம் விசேட பெற்றோலை இலவசமாகத் தயாரித்துத் தருவதாக அறிவித்துள்ளது.

டெண்டுல்கரை கௌரவிக்கும் முகமாக விசேட பெற்றோல் தயாரிக்கப்படுவதாக மத்திய அரச நிறுவனமான பாரத் பெற்றோலியம் தெரிவித்துள்ளது.

முற்கட்டமாக 100 லீற்றர் பெற்றோலைத் தயாரித்துக் கொடுக்கவுள்ளது. சாதாரணமாகத் தயாரிக்கும் பெற்றோல் செலவைவிட இந்த விசேட பெற்றோலுக்கு இரண்டு மடங்கு செலவாகும். இந்த விசேட பெற்றோலால் மாசுக் கட்டுப்பாடு எதுவும் ஏற்படாமல் இருந்தால் மட்டுமே டெண்டுல்கர் பெராரி காரை பயன்படுத்த இயலும்.



# இந்தியாவை தோற்கடித்ததன் மூலம் பாகிஸ்தான் இறுதிப்போட்டிக்கு தெரிவானது

ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004



பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் ஐந்து விக்கெட்டுக்களால் இந்தியாவைத் தோற்கடித்ததன் மூலம் இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய வீரர்கள் - பாகிஸ்தான் வீரர்களின் பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் ஓட்டமெடுக்கத் திணறினர்.

இறுதியில் 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும்

விளையாட்டு

இழந்து 160 ஓட்டங்களை இந்தியா பெற்றது. இந்த அணி சார்பாக உதப்பா 33, சொலங்கி 21, சிங் 25, சர்மா ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அப்ரிடி, இம்ரான் ஹைடர், ம·மூட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் அம்ஜாட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி வீரர்களின் முதல் நான்கு விக்கெட்டுக்களும் மிகச் சொற்ப ஓட்டங்களுடன் வீழ்ந்தபோதும், ஆறாவது விக்கெட்டுக்காக ம·மூட்டுடன் ஜோடி சேர்ந்த அலாம் இருவரும் 88 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் இணைப்பாட்டமாகப் பெற்றனர். இதில் ம·மூட் 45, அலாம் 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சிங் 2, டிமான் குப்தா, சர்மா மூவரும் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ம·மூட் தெரிவானார்.

இங்கிலாந்து - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் பாகிஸ்தான் இறுதிப்போட்டியில் மோதவுள்ளது.

# யாழ். வலய கோட்ட மட்டத்திலான வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்.வலயத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணக் கோட்ட முடிவுகளின்படி - 15 வயதுக்குட்பட்ட பிரிவில், திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலயம் முதலாம் இடத்தையும் வேம்படி மகளிர் கல்லூரி 2 ஆம் இடத்தையும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றன.

17 வயதுப் பிரிவில் - வேம்படி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் திருக்குடும்ப கன்னியர்மடம் 2 ஆம் இடத்தையும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் - வேம்படி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாசாலை 2 ஆம் இடத்தையும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றன.

நல்லூர் கோட்ட முடிவுகளின்படி, 15 வயதுக்குட்பட்ட பிரிவில் - யாழ். இந்துமகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் கொக்குவில் இந்துக் கல்லூரி 2 ஆம் இடத்தையும் கனகரட்னம் மத்திய மகாவித்தியாலயம் 3 ஆம் இடத்தையும் பெற்றன.

17 வயதுப் பிரிவில் - கனகரட்னம் மத்திய மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் கொக்குவில் இந்துக் கல்லூரி 2 ஆம் இடத்தையும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் கனகரட்னம் மத்திய மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெரியபுலம் மகாவித்தியாலயம் 3 ஆம் இடத்தையும் பெற்றன.

கோப்பாய் கோட்ட முடிவுகளின்படி, 15 வயதுப்பிரிவில் - ஆவரங்கால் நடராசா இரமலிங்கம் வித்தியாசாலை முதலாம் இடத்தையும் இடைக்காடு மகாவித்தியாலயம் 2 ஆம் இடத்தையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றன.

17 வயதுப் பிரிவில் - ஆவரங்கால் நடராசா இரமலிங்கம் வித்தியாசாலை முதலாம் இடத்தையும் சோமஸ்கந்தாக் கல்லூரி 2 ஆம் இடத்தையும் அத்தியார் இந்துக் கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் - இடைக்காடு மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் சோமஸ்கந்தா கல்லூரி 2 ஆம் இடத்தையும் ஆவரங்கால் நடராசா இராமலிங்கா வித்தியாசாலை 3 ஆம் இடத்தையும் பெற்றன.(58)

# கர்நாடக மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சியமைக்கும்!

## வெங்கையா நாயுடு தெரிவிப்பு



(பெங்களூர்)

கர்நாடக மாநிலம் பெல்லாரியில் பாரதீய ஜனதாகட்சி தேர்தல் பிரசார பேரணி நடைபெற்றது. இதை அகில இந்திய பாரதீய ஜனதா கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு தொடக்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது -

கர்நாடக மாநிலத்தின் வடக்கு மாவட்டங்கள் காங்கிரஸ் கட்சியின் கோட்டை என்று கூறப்பட்டது.

ஆனால் இந்தக் கோட்டையை பாரதீய ஜனதா கட்சி தகர்த்து விட்டது. இப்போது கர்நாடக மாநிலத்தின் வடக்கு மாவட்ட மக்கள் பாரதீய ஜனதா கட்சியை ஆதரிக்க முடிவு செய்துவிட்டனர்.

கர்நாடக மாநிலத்தில் எப்போதுமில்லாத அளவுக்கு இப்போது பாரதீய ஜனதா கட்சிக்கு பெருமளவில் ஆதரவு பெருகியுள்ளது. சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க கர்நாடக காங்கிரஸ் அரசு தவறிவிட்டது.

தென் மாநிலங்களில், கர்நாடக மாநிலத்தில் முதல் முறையாக பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சி அமைய இருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு மக்கள் விரோத போக்கை கடைப்பிடித்தது. மேலும் போலி முத்திரைதாள் மோசடியிலும் கர்நாடக காங்கிரஸ் அமைச்சருக்கு தொடர்புள்ளது.

இதனால் காங்கிரஸ் அரசு மீது மக்களுக்கு வெறுப்பேற்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் பாரதீய ஜனதா அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று தனியாக ஆட்சி அமைக்கும்.

துணைப் பிரதமர் அத்வானி விரைவில் கர்நாடக மாநிலத்தில் சூறாவளி தேர்தல் பிரசாரம் செய்யவிருக்கிறர். தும்கூர் பெங்களூர் மற்றும் பல இடங்களில் நடைபெறவுள்ள தேர்தல் பிரசார பேரணியில் அவர் கலந்துகொள்வார். தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு கர்நாடக சட்டசபையை காங்கிரஸ் அரசு கலைத்தமை, அவர்களது அனுபவம் இல்லாத தன்மையைக் காட்டுகிறது. இது பாரதீய ஜனதாவுக்கு சாதகமாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசியல் விவகாரங்கள் தொடர்பாக ரஜினி - விஜயகாந்த் ஆலோசனை!

## இரகசியமாக ஹைதராபாத்தில் நடந்தது

(சென்னை)

நடிகர்கள் ரஜினிகாந்தும் விஜயகாந்தும் வரும் மக்களவை தேர்தல் குறித்து ஹைதராபாத்தில் தனியே சந்தித்து ரகசிய ஆலோசனைகள் நடத்தினர்.

இருவருமே நேற்றுமுன்தினம் விமானத்தில் ஹைதராபாத் சென்றனர். பஞ்சாரா ஹில்ஸ பகுதியிலுள்ள 5 நட்சத்திர ஹோட்டலில் இருவருக்கும் அடுத்தடுத்த அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

ஹைதராபாத் விமான நிலையத்தில் இருந்து தனித்தனி கார்களில் இருவரும் ஹோட்டலுக்குச் சென்றனர்.

இதையடுத்து ரஜினியின் அறையில் இருவரும் ஆலோசனை நடத்தினர். சுமார் 2 மணிநேரம் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சினிமாவுக்கு இளைஞர்கள் அடிமையாகி சீரழிந்துபோவதாக பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கூறி வருகிறார். குறிப்பாக ரஜினியும் விஜய்காந்தும் ரசிகர் மன்றங்கள் என்ற பெயரில் இளைய தலைமுறையை குட்டிச் சுவராக்கி வருவதாக குற்றஞ்சாட்டி வருகிறார்.

விஜய்காந்த் ரசிகர் மன்றத்தில் வன்னிய இளைஞர்கள் பெருமளவில் இருப்பதால், அவர்கள் அதிலிருந்து விலகிவரச்செய்யும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். இதனால் ரஜினியும் விஜய்காந்தும் ராமதாஸ் மீது கோபத்தில் உள்ளனர்.

இந்நிலையில் தேர்தல் நெருங்குவதையடுத்து ரஜினி எதிர்ப்பு விடயத்தில் ராமதாஸ் அடக்கி வாசிக்க ஆரம்பித்தார். ஆனால், பா.ம.க. எதிர்ப்பில் ரஜினி வேகம் காட்ட ஆரம்பித்துள்ளார்.

இந்த நிலையில் ரஜினியும் விஜயகாந்தும் சந்தித்துப் பேசியது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

தேர்தலில் பா.ம.கவை தோற்கச் செய்ய தங்களது ரசிகர்களை கூட்டாக இறக்கி விடுவது குறித்து இருவரும் ஆலோசித்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# தமிழர்களின் ஜனநாயக பலத்தை இந்தத் தேர்தல் வெளிப்படுத்தும்

## கூட்டமைப்பு வேட்பாளர் சிவமகாராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் ஜனநாயகரதியான பலத்தை வெளிப்படுத்தும் தேர்தலாகவே இம்முறைத் தேர்தல் நடைபெறப் போகிறது. இதனை உணர்ந்து அனைத்து மக்களும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி, தமிழர்களுடைய ஒற்றுமையையும், ஜனநாயகபலத்தையும் உலகறியச் செயயவேண்டுமெனத் தமிழ்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களுள் ஒருவரான சி.சிவமகாராஜா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்களுக்கான தேர்தல் தொடர்பான முன்னோடிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட முன்பள்ளிகளின் இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தமிழினி, வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் வி.பி.தமிழ்மறவன், யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன், தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் எஸ்.தனபாலசிங்கம், கூட்டமைப்பு வேட்பாளரான பத்மினி சிதம்பரநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் வேட்பாளர் சிவமகாராஜா தொடர்ந்து உரையாறறுகையில் - தமிழ் மக்கள் இன்று இராணுவ ரீதியாக, அரசியல்ரீதியாகத் தமது பலத்தை சர்வதேச அரங்கிலே நிலைநாட்டியுள்ளனர். தற்போது நடைபெறவுள்ள தேர்தலமூலமாகத் தமது ஜனநாயகபலத்தையும், விடுதலைப் புலிகளின் தலைமையின் பலத்தையும், அதன்மீதான தமது நம்பிக்கையையும் உலகறியச் செய்யப்போகிறார்கள்.

இன்று நாம் விடுதலையின் விளிம்பிலே வந்து நிற்கிறோம். ஆனாலும், எங்களுடைய வீட்டிலே எம்மால் குடியேற முடியவில்லை, எமது கடலிலே எம்மால் சுதந்திரமாக மீன்பிடிக்க முடியவில்லை, எமது சொந்த இடத்திலே எமது தொழிலைச் செய்யமுடியவில்லை. இந்த உரிமைகள் எமக்கு மறுக்கப்பட்டுள்ளது. இதனை ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கீரிமலை எமது புனித பிரதேசம். அந்தப் பகுதியிலே தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம் - ஒரு சிற்றுண்டிச்சாலை அமைக்கத் தடைவிதிக்கப்பட்டுளது. ஆனால், இராணுவத்தினர் ஒரு சிற்றுணடிச்சாலை நடததுகின்றனர். இராணுவத்தினரின் வேலையா சிற்றுண்டிச்சாலை நடத்துவது? அதற்காகவா அவர்கள் தென்னிலங்கையிலிருந்து இங்கே வந்து முகாமிட்டுள்ளனர்.



இன்று எமது சிறார்கள் சுதந்திரமானமுறையிலே கல்வி பயிலக்கூடிய சூழ்நிலையில்லை. எமது மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்லமுடியவில்லை. இவையெல்லாவற்றையும் அடியோடு அகற்றுவதற்காகத் தேசியத்தலைவரின் தலைமையிலே நாமெல்லோரும் அணிதிரளவேண்டும்.

உங்களுடைய விடுதலைக்காக, உங்களின் வருங்காலத்திற்காக ஒன்றுசேரவேண்டிய தேவையுள்ளது. எமது போராட்டம் பல்வேறு வடிவங்களினூடாகவே எடுத்துவரப்பட்டது. அதனுடைய அடுத்த வடிவமாகத் தமிழ் மக்களின் ஜனநாயகபலத்தை வெளிப்படுத்தும் நாளாக ஏப்ரல் 2 அமையப்போகிறது. அதனை மக்கள் முறையாகப் பயன்படுத்தவேண்டும்.

எமது இனம் கூறுபோடப்படவில்லையென்பதை உலகிற்கு உணர்த்த, எமது மக்கள் சரியான முடிவை எடுக்கவேண்டும்.

தமிழ் மக்களுடைய போராட்டம் - பயங்கரவாதப் போராட்டமல்ல. அது உண்மையான விடுதலைப் போராடடம் என்பதை உலகம் உணர்ந்துள்ளது. அதனால்தான், கிளிநொச்சிக்கு சர்வதேச பிரதிநிதிகள் படையெடுக்கிறார்கள். அவர்கள் நாடிச்செல்லும் விடுதலைப் புலிகளுக்கு இராணுவபலம் உண்டு. இந்தத் தேர்தல்மூலம் நாம் புலிகளுக்கு ஜனநாயகபலத்தையும் பெற்றுக்கொடுப்போம் எனத் தெரிவித்தார். (94)

### கணக்காளர் இடமாற்றம்

தென்மராட்சிப் பிரதேசசெயலகத்தில் கடந்த வாரம் கணக்காளராகக் கடமையாற்றிய எஸ்.வசந்தமாலா - கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார்.

இவரின் வெற்றிடத்திற்கு யாழ். பிரதேச செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய கில்பேட் குணம் மாற்றப்பட்டார். (25)

### மண்டைதீவு நுழைவாயிலில் புதிய பெயர்ப்பலகை

மண்டைதீவுக்குச் செல்லும் நுழைவாயிலில் அமைந்துள்ள கடற்படை முகாம் பகுதியில் 'அபாயகரமான பகுதி' எனப் பெயர்ப்பலகை ஒன்று போடப்பட்டுள்ளது.

இந்தப் பலகையில் 'அபாயகரமான பகுதி' எனக் குறிப்பிட்டு - அதன்கீழே விடியோக்கமரா, சாதாரண கமரா, கையடக்கத் தொலைபேசி போன்றவற்றின் படங்கள் வரையப்பட்டு, அவற்றின்மேல் சிவப்பு நிறத்தினால் புள்ளடியிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட உபகரணங்களைக் கொண்டுசெல்லமுடியாது என்பதால்தான், இவ்வாறன ஒரு அறிவித்தல் பலகை போட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (113)

### மருந்துகள் விசிறப்பட்ட கீரைகள் விற்பனைக்கு

இரசாயன மருந்துவகை பாவிக்கப்பட்ட கீரைவகைகள் - யாழ். குடாநாட்டு சந்தைகளில் விற்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரசாயன மருந்துவகை விசிறப்பட்டு 7-14 நாட்கள் வரை சென்ற பின்னரே, கீரைவகைகள் சந்தைப்படுத்தப்படவேண்டும். ஆனால், சில கீரை உற்பத்தியாளர்கள் இரசாயன மருந்துவகைகளை விசிறி, சில நாட்களுக்குள்ளேயே அதனை சந்தைப்படுத்தி வருவது - உடலுக்குத் தீங்குவிளைவிக்கும் பல நோயகளை உண்டாக்கும் எனப் பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (46)

### தேர்தல் பதாதைகள் அழிப்பு

யாழ்.நகரப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரான எம்.கே. சிவாஜிலிங்கத்தின் தேர்தல் சுவரொட்டிகள்மீது - இனந்தெரியாதோர் கழிவு எண்ணெய்களை ஊற்றியுள்ளனர்.

இரவுவேளைகளில் இடம்பெற்ற இந்த அநாகரிகமான செயல்களில்- தேர்தல் பதாதைகள் பலவும் கிழித்தெறியப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முதற்கட்டமாக எம்.கே. சிவாஜிலிங்கத்தை ஆதரிக்கும் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பலவர்ணத்தில் அமைந்த இவரது சுவரொட்டிகள் முழுமையாக வெளியே தெரியாவண்ணம் கழிவுஎண்ணெய் ஊற்றப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. (94)

### அனலைதீவுக்கு விரைவில் மின்சாரம்

அனலைதீவு பிரதேசத்தில் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு - விரைவில் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அனலைதீவில் பெரும்பாலான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டபோதிலும், குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படவில்லை. இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

முதற்கட்டமாக இந்தப் பகுதிகளுக்கு மின்கம்பங்கள் எடுத்துச் செல்லப்பட்டதுடன், அவற்றினை நடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகின்றன.

இதேவேளை, நீண்டகாலமாக இந்தப் பகுதியில் வீட்டு மின்னிணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்து காத்திருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (83)



வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் வருடாந்த கலாசார விழாவின்போது - கலைச்சுடர் பட்டம் வழங்கி, கௌரவிக்கப்பட்ட கலைஞர்களை மேலுள்ள படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம். (94)

# வீதி ஒழுங்கு விதிகளுக்கு அமைய வாகனங்களைச் செலுத்தவும்

## தமிழீழ காவால்துறை வேண்டுகோள்

மக்களையும், சாரதிகளையும் பாதுகாக்கும் முகமாகச் சாரதிகள் வீதி ஒழுங்கு விதிகளுக்கு அமைய வாகனங்களை செலுத்துமாறு - தமிழீழ காவல்துறைப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு கேட்டுள்ளது.

அண்மைக்காலமாகச் சாரதிகளினது அசமந்தப் போக்குக் காரணமாக, வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. வாகனசாரதிகள், சீராகப் போக்குவரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு காவல்துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இதற்கமைய, வாகனசாரதிகள் வீதிகளில் தொங்கவிடப்பட்டிருக்கும் வேக எல்லைப் பலகைகளுக்கமைய வாகனத்தினைச் செலுத்தவேண்டும். இதைவிட சாரதிகள் சுய கட்டுப்பாட்டு அடிப்படையிலே வாகனத்தைச் செலுத்தவேண்டும். வாகனத்தைச் செலுத்துகின்றபோது, மது போன்ற போதையூட்டும் பானங்களை அருந்தக்கூடாது. அதைவிட, தாம் செலுத்தும் வாகனத்தைத் தன்னால் கட்டுப்படுத்தக்கூடிய வேகத்திலேயே செலுத்தவேண்டும். வாகனம் செலுத்தும்போது நிதானத்தில் இருந்து விலகக்கூடாது.

முக்கியமாக, வாகனசாரதிகள் வாகனத்தைச் செலுத்தும்போது தமக்குத் தேவையான ஓய்வை எடுத்து, வாகனத்தைச் செலுத்தவேண்டும். தன்னாலும் பிறராலும் வரக்கூடிய விபத்துக்களைத் தவிர்க்கக்கூடிய வகையில் சாரதி இருக்கவேண்டும்.

காவல்துறைக் கண்காணிப்புப் பகுதிகள் குறைந்த பகுதிகளில் வாகனத்தைச் செலுத்தும்போது, நிதானம் தவறாது செலுத்தவேண்டும, போக்குவரத்து நடைமுறைகளுக்கேற்ப வாகனத்தைச் செலுத்தவேண்டும் எனக் காவல்துறை போக்குவரத்துப் பிரிவு கேட்டுள்ளது. (தீ)

# பாடசாலை பெயர்ப்பலகை இரவுவேளையில் நாசம்

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தின் பெயர்ப்பலகை - இரவு வேளையில் விசமிகளால் நாசம் செய்யப்பட்டது. பெயர்ப்பலகையைத் தாங்கிநின்ற கம்பங்கள் இரண்டும் அடியோடு பெயர்க்கப்பட்டு, வளைத்து முறிக்கப்பட்டுள்ளது.

முறிக்கப்பட்ட கம்பங்களுள் ஒன்றும், பெயர்ப்பலகையும் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலத்திலேயே இந்தப் பெயர்ப்பலகை புதிதாகத் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தனிப்பட்ட விரோதங்கள் காரணமாகவோ அல்லது மதுபோதையில் வந்தவர்களாலோ இது நடந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (94)

# குன்றும் குழியுமாகக் காணப்படும் கெருடாவில் - மீசாலை வீதி

கெருடாவில் கந்தசாமி கோவில் முன்புறமாக, மீசாலை நோக்கிச் செல்லும் சுமார் 3 கிலோமீற்றர் நீளமான வீதி மிக நீண்டகாலமாகத் திருத்தப்படாமல், பாரிய குன்றும் குழியும் நிறைந்த வீதியாகக் காணப்படுகின்றது.

இதனால், போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு நிலைமை காணப்படுகின்றது. கச்சாய், அல்லாரைப் பகுதிகளிலிருந்து மணல் ஏற்றிக்கொண்டு மீசாலையூடாக இந்தப் பாதைவழியேதான் உழவு இயந்திரங்கள் - மட்டுவில், சரசாலை மற்றும் வலிகாமம், வடமராட்சி பகுதிகளுக்குச் செல்கின்றன. அத்துடன், வயல்வெளிகளிலிருந்து வைக்கோற் பாரத்துடன் வரும் உழவு இயந்திரங்களும் பலத்த சிரமத்தின் மத்தியிலேயே இந்தப் பாதையூடாகப் பயணஞ்செய்கின்றன. இந்தப் பாதை திருத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காததினால், மக்கள் விசனமடைந்துள்ளனர்.(24)

# சமூக முன்னேற்ற கழக சமாசத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவுவிழா

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 22 ஆம் ஆண்டு நிறைவுவிழா - நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா, ஊர்காவற்துறை மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர், யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, யாழ்ப்பாண ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் த.ஜெயராசசிங்கம், சமூக விஞ்ஞான படிப்புக்கள் வட்டத்தைச் சேர்ந்த க.வேல்தஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் நா.தங்கவடிவேல், க.நவரத்தினம் ஆகியோருக்குச் சமூக ஜோதி என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. சிறப்புரைகளை துணைவேந்தர் மோகனதாஸ், மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா, மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோர் நிகழ்த்தினர். (தீ)

# மகளிர் அபிவிருத்தி நிலைய தையல், மனையியல் கண்காட்சி

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவினால் நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் கண்காட்சியும், விற்பனையும் நாளையும், நாளைமறுதினமும் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி டச்சுவீதியில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் - காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை, சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் உருத்திராதேவி சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகத் தென்மராட்சி பிரதேசசெயலர் செ.ஸ்ரீனிவாசன் கலந்துகொள்வார். (24)

# மிருகங்களோ துணை

மனிதர்களுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளுக்கு மிருகங்களைப் பரிசோதிப்பது வழமையான ஒரு செயற்பாடாகும். இவை அதிகளவு பயனைத்தருவதில்லை என அண்மைய ஆய்வுகள்மூலம் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இவ்வகையான ஆய்வுகள் சரியான முறையில் நடத்தப்படுவதில்லை எனவும், பிரித்தானியாவின் சுகாதாரம் உஷ்ண வலய நாடுகளுக்கான மருந்துகள் தொடர்பான கல்விப் போதனை நிலையமொன்று தெரிவித்துள்ளது. அதே நேரத்தில், இன்று அதிகளவிலான நோய்களுக்கான காரணிகளை அறிவதில் மிருகங்கள் மீது நடத்திய ஆய்வுகள் பேருதவியாக அமைந்திருந்தன என்பதையும் இங்கிலாந்திலுள்ள றோயல் கழகம் தெரிவித்துள்ளது. மேலும் மனிதர்களிலிருந்து மிருகங்கள் மாறுபட்ட முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் அவற்றிற்கு ஏற்படும் நோய்களும், அவற்றை குணமடையச் செய்வதற்கான வழிமுறைகளும் மாறுபட்டே காணப்படுகின்றன.






நோயை மாற்றிக் கொள்வதற்கு மனிதனுக்கு வழங்கப்பட வேண்டிய அளவு (DOSAGE) விலங்கிலிருந்து மாறுபட்டே காணப்படுகிறது.

ஆனால், றோயல்கழகத்தில் கடமையாற்றும் பேராசிரியர் கெலின் பிளேக்மோர் கருத்துத் தெரிவிக்கும்போது - மருத்துவத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் விலங்குகள் உதவியதாகத் தெரிவித்தார். குறிப்பாக தடுப்புமருந்துகள், இருதய மாற்று சத்திர சிகிச்சை, சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை ஆகியவற்றில் மிருகங்கள் மீது நடத்திய பரிசோதனைகள் பேருதவியாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# வளையமுள்ள சனிக்கிரகம்

கிரகங்களிலேயே தன்னைச்சுற்றி ஒரு வளையத்தினைக் கொண்டது சனிக்கிரகம். இது உண்மையில் தூசுத்துணிக்கைளால் ஆனது எனக் கூறப்படுகிறது.




அமெரிக்க - ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிகளின்படி - இந்தப் பெரிய கிரகத்தினை 69 மில்லியன் கிலோமீற்றர் தூரத்திலிருந்து பார்க்கக் கூடியதாகவுள்ளது.

இந்தக் கோளினைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகக் கசினி என்ற விண்கலம் 4 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பப்பட்டது. இந்த விண்கலத்தின் தலைமைக்கட்டுப்பாட்டு அதிகாரியின் கருத்துப்படி, இந்த விண்கலத்தின் ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததாக அறியப்படுகிறது. இந்தக் கசினி என்ற விண்கலம் சித்திரை மாத முற்பகுதியில் பூமியை வந்தடைய இருக்கிறது. இந்த ஆராய்ச்சித் தொகுதியில் ஏறக்குறைய 260 விஞ்ஞானிகளும், 17 நாடுகளும் பங்குகொண்டிருக்கின்றன. இதனுடைய வளையம்மூலம் - காந்தக்கவர்ச்சி மற்றும் குளிர்காலநிலை பற்றிய புதுமையான கண்டுபிடிப்புக்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தரையிறங்கப் போகும் கசினி விண்கலம் மேலும் சில அற்புதமான விளைவுகளைத்தருமென முழுச்சர்வதேசமும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

# ரீவி கேம்

கணினிகளில் காணப்படுகின்ற ரீவி கேம்கள் - அலுக்க அலுக்க புதிது புதிதாக மாற்றப்பட வேண்டியிருக்கின்றன. பவ்டா என்ற கம்பனி வைஸ் சிட்டி மோட்டோர்ஸ் என்ற விதம் விதமான கார் ஓட்டப்பந்தயம் மற்றும் மோட்டார் சைக்கிள் பந்தயம் போன்றவற்றினை ரீவி கேம்களாக ஆக்கி, கொம்யூட்டர்களில் போட்டு வைத்திருக்கிறன.



அணமையில் பெரும்பாலும் சிறுவர்கள் விளையாட்டுப்பந்தயங்களில் உள்ள ஈர்ப்பினை இழந்து, போர்விடயங்கள் அதாவது துப்பாக்கி சுடுதல் போன்றவற்றில் ஈர்க்கப்படுகிறார்கள். இதன் காரணமாக ரீவி கேம் கம்பனிகள் போர் பற்றிய ரிவி கேம்களை உருவாக்குவதில் குறியாக இருக்கின்றார்கள். அண்மையில் வந்த மிகச்சிறப்பான ரிவி கேம் - ஸ்டார் வோர்ஸ் ஆகும். இது சொனி என்ற கம்பனியால் உருவாக்கப்பட்டது. இது விவா 2004 என்ற விளையாட்டு அம்சமாகும். ஆரம்பத்தில் ஜப்பான் நிறுவனங்களே இதில் மிகவும் மும்முரமாக இருந்தன. ஆனால், தற்போது அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் நிறுவனங்களும் ரிவி கேம் உற்பத்தியில் விறுவிறுப்பாக இருக்கின்றன. எது எப்படி இருந்தாலும், சிறுவர்களுக்கு இனிக் கொண்டாட்டம்தான்.

# திரை விமர்சனம்



## ஆட்டோகிராப்

ஆக்ஷன் மற்றும் மசாலாப்படங்கள் வருகின்ற இந்தநேரத்தில், சேரன் ஒரு வித்தியாசமான கதையம்சத்தை எடுத்துக் கையாண்டிருக்கிறார். கதாநாயகனாக நடித்திருக்கும் சேரன் - தன்னுடைய திருமண அழைப்பிதழ்களைச் சிறுவயது காலத்திலிருந்து தன்னுடன் பழகிய எல்லோருக்கும் கொடுக்கநினைக்கிறார். இதற்காக எல்லா ஊர்களுக்கும் சென்றிருக்கிறார். முதலாவதாகப் பள்ளிப்பருவத்தில் மல்லிகாவுடன் காதல். கல்லூரி வாழ்க்கையில் கோபிகாவுடன் காதல். இரண்டுக்கும் நிறையவே வேறுபாடுகள். இந்தக் காதல் காட்சிகளில் கமராமேன் விஜய்மில்டன் வெளுத்துக் கட்டியிருக்கிறார்.


பின்பு சினேகாவின் நட்பு. இருவரும் காதலிப்பார்களோ என்று நினைத்தால் ஏமாற்றமே. இறுதியில் எல்லா ஆட்டமும் ஆடி முடிந்து கனிகாவை மணக்கிறார் சேரன். பரத்வாஜின் கைவண்ணத்தில் அனைத்துப் பாடல்களும் அருமையாக இருக்கின்றன. ஆனாலும் "ஒவ்வொரு பூக்களுமே" பாடல் மனதில் நிற்கின்றது. நடிகராக சேரன் பெற்ற ஒரு வெற்றி இதுவென்று கூறலாம். ஆனால் நீண்டு செல்கின்ற திரைக்கதை, சற்று படத்தின் போக்கை மாற்றியிருக்கிறது. என்றாலும், சேரனிடம் ஒரு ஆட்டோகிராப் வாங்கத்ததான் வேண்டும்.

# நோ! முறிவுநோ

முதுகுவலி, மூட்டுவலி ஆகியவற்றினால் அவதிப்படும் மக்கள் - அதனைக் குணப்படுத்தமுடியாது மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய ஒருவகையான மருந்து- வலியிலிருந்து விடுதலை தருகின்றது. ஆரம்பத்தில் பண்டேஜ் போட்டால் சரியாகிவிட்ட நோவுகள் எல்லாம் - தற்போது மிகவும் சிக்கலான முறைமூலம்தான் குணப்படுத்தப் படுகின்றது. இந்தப் புதியவகை மருந்தின்மூலம் முள்ளந்தண்டு சம்மந்தமான வியாதிகள் இலகுவில் குணப்படுகின்றன.




அமெரிக்காவில் நடந்த உலகவர்த்தக மையக்கோபுரத் தாக்குதலில் - கால், கை முறிந்தவர்கள் டொக்டர் கொல்மன் என்பவரினால் இந்தவகை மருந்தின் மூலம் வெற்றிகரமாகச் சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் வயது போனவர்களுக்கு முறிந்த எலும்புகளைப் பொருத்துவது மிகவும் கடினம் என்றும், அது பொருந்தாது என்றும் இருந்த நிலைமைபோய், தற்போது வெகுஇலகுவாக முறிவுநோய்கள் குணப்படுத்தப்படுகின்றன என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயம்தான்.



இதில் மிகவும் முக்கிய விடயம் எதுவெனில் மூளையில் ஏற்படும் ஒருவகையான அழுத்தத்துக்கும் இதே மருந்துகளை குணமாக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

# புது இயந்திரம்

இரண்டு தட்டுக்களைக் கொண்ட A380 என்ற நவீனரக விமானம் - பிரித்தானியாவில் உருவாக்கப்பட்டு வருகின்றது. இந்த விமானம் 555 பயணிகளுடன் பயணம் செய்யக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த விமானம் ஓடுபாதையிலிருந்து புறப்படும்போது, 70 000 இறாத்தல் நிறைகொண்டு உந்து விசையை (THRUST) பிரயோகிக்கவேண்டியுள்ளது. இதனால், அதிக சக்திகொண்ட இயந்திரம் தேவைப்படுகிறது. விமானங்களுக்கு இயந்திரங்களை வடிவமைப்பதில் புகழ்பெற்ற "ரோல்ஸ் ரோய்ஷ்" எனப்படும் ஸ்தாபனம், இயந்திரம் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. சூழலைப்பாதிக்கும் இரு காரணிகளான நச்சுப்புகையின் வெளியேற்றம், பலத்த ஒலி ஆகிய இரண்டும் இந்த வகையான விமானத்தின் இயந்திரத்தில் குறைக்கப்பட்டுள்ளன.



விமான இயந்திரமொன்றின் உள்ளுறுப்புக்களில் ஏற்படும் பாதிப்புக்களை அறிந்துகொள்வதற்குக் குறிப்பிட்ட கால இடைக்குள் விமான இயந்திரங்கள் பரிசோதிக்கப்படுவது வழமையான ஒரு நிகழ்வாகும். ஆனால், A 380 இயந்திரங்களில் ஏற்படும் தவறுகளை உடன் அறிவிக்கக் கூடியவாறு சாதனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

எரிபொருட்கள் முற்றாக எரியாத நிலையில், நச்சு வாயுக்கள் வளியில் கலந்தவிடும் சாத்தியங்கள் ஏற்படுகின்றன. ஆனால், A 380 ரக இயந்திரத்தில் முழுமையான தகனம் நிகழ்வதால், வளிமண்டலத்திற்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படுவதில்லை.




# நோயினைக் குணமாக்கும் தொலைபேசிகள்

நோயாளி ஒருவரின் நோயின் காரணிகளை (Diagnose) அறிவதற்குச் செல்லிட தொலைபேசிகளூடாகப் படங்களை அனுப்பும்முறை பிரித்தானியாவில் அதிகளவில் தற்போது பாவிக்கப்படுகின்றது. இந்தமுறை இலகுவாக அமைந்தாலும், நோயாளிக்குப் பல பாதிப்புக்களை உருவாக்குவதாக அறிந்துள்ளனர். ஒருவரின் நோய் தொடர்பான தகவல்கள் வைத்தியருக்கும், நோயாளிக்குமிடையே இரகசியமாகப் பேணப்படுதல்வேண்டுமெனப் பிரித்தானியாவின் வைத்தியசங்கத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரி நிக்நோவெல் தெரிவித்தார்.



அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படங்களையும், அனுப்பக்கூடிய செல்லிடத் தொலைபேசியின்மூலம் - குடும்பவைத்தியர்கள் நோயாளியின் உடலுறுப்புக்களின் படங்களை வைத்திய அதிகாரிகளின் பரிசோதனைக்காக அனுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

எக்ஸ்ரே படங்களை இந்தமுறையில் குடும்பவைத்தியர்கள் அந்தநோய் தொடர்பான வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வருகின்றனர். இதன்மூலம் வைத்திய அதிகாரிகள் - நோயாளிக்கு எவ்வகையான சிகிச்சைகள் மேற்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்து வருகின்றனர். பிரித்தானியாவில் வேல்ஷ் நகரத்துக் குடும்பவைத்தியர்கள் - தோல் நோய் சம்பந்தப்பட்டவர்களில் (**Dermatological Diseases**) பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் படங்களை அந்தநோய் தொடர்பான வைத்தியர்களுக்கு அனுப்பியுள்ளனர். இதனால் அந்த வைத்தியர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தை 25 வீதமாக குறைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல சந்தர்ப்பங்களில் இவ்வகையான படங்களை ஆதாரமாக உபயோகித்து, தவறான சிகிச்சை முறைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கேளூ வோக்மன்

இன்று உலகளாவியரீதியில் இலத்திரனியல் உலகில் முன்னணியில் திகழ்கின்ற நிறுவனங்களில் சொனியும் ஒன்று. சாதாரண விளையாட்டுப் பொருட்கள் முதல், பாரிய தொலைக்காட்சிகள்வரை இந்த நிறுவனம் உற்பத்தி செய்கின்றது. உலகிலுள்ள பல நாடுகளுடன் சேர்ந்து தயாரிப்பில் ஈடுபடும் சொனி நிறுவனத்தின் தாய்நாடு ஜப்பான். ரீவிகேம்களை உற்பத்தி செய்வதில் சொனிக்கு நிகர் அதுதான். புதுசு புதுசாகச் சந்தைக்கு வருகின்ற வோக்மனை - சிறுவர்முதல் பெரியோர்வரை விரும்புகின்றனர். ஒரு அருமையான வோக்மன் ஒன்று 2004 ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையின்போது, சந்தைக்கு வரவிருப்பதாக ஜப்பான் நாட்டின் சொனி கோப்பரேஷன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்குப் போட்டியாக அமெரிக்காவின் சொனி நிறுவனம் மார்ச்மாதம் 2005 ஆம் ஆண்டளவில் ஒரு வோக்மனை உருவாக்க இருப்பதாகக் கூறுகின்றது. இதற்கிடையில் வோக்மனை உருவாக்கும்பொழுது, அத்துடன் ரீவி கேமையும் அதனுடன் சேர்த்து உருவாக்கினால் என்ன என்று அமெரிக்க இலத்திரனியலாளர்கள் சிந்திக்கின்றார்கள்.





இது மட்டுமா, இத்துடன் மியூசிக் கம்போசர் மற்றும் டிவிடி ஆகியனவும் வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், முதன்முதலில் சொனி கோப்பரேசன வோக்மனைத் தயாரித்தது 1980 களில் ஆகும். ஆனால், இதற்குப் பிறகு 23 வருடங்களில் பெறப்பட்ட சாதனை வோக்மன்களில் ஒரு பெரியளவுதான்.

# நெட் வில்லன்

இன்ரநெட் உலகில் இருக்கின்ற மக்களுக்கு வில்லன்களும் இருக்கின்றார்கள். அவர்கள்தான் இன்ரநெட் வைரஸ்கள்.

இந்த ஆண்டில் மிகச்சிறந்த இன்ரநெட வில்லனாக வீரிசைன என்ற வைரஸ் இருக்கிறது. இது முற்றுமுழுதாக இன்ரநெட் அமைப்பினை ஸ்தம்பிக்கவல்லது. அண்மையில் நடைபெற்ற **UK** நெட் இன்டஸ்ரீஸ் உடைய வருடாந்த விழாவில் இந்தக் கம்பனிக்கு இரண்டு விருதுகள் கிடைத்திருக்கின்றன. ஆனால், இந்த வில்லன் வைரஸினை எதிர்க்கக் கூடிய ஆற்றல்கொண்ட வைரஸினை அமெரிக்கக் கம்பனி ஒன்று உருவாக்கியிருக்கின்றது. அதனுடைய பெயர் - குக்லி. இது இன்ரநெட் வில்லன் வைரஸினைத் தேடிக் கண்டுபிடிக்கக்கூடியது. ஸ்பீவ் லின்போர்ட் என்பவர் தன்னுடைய கடின உழைப்பினால் வில்லன் இன்ரநெட் வைரஸ்களை அழிக்கக்கூடிய ஒருவகையான புரோகிறாமினைக் கண்டுபிடித்திருக்கிறார்.




உலகமே இன்ரநெட் உலகில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில், இன்ரநெட் வில்லன்களை அழிக்கவேண்டிய தேவையில் உலகம் இருக்கின்றது.

அண்மையில் புல்டோக் கொமினிக்கேசன்ஸ் என்ற நிறுவனத்தின் அதீதமான இன்ரநெட் வில்லன்களில் எதிரி வைரஸ்கள் உலகினைத் தொடர்ந்து இன்ரநெட்டில் வைத்திருக்கும்.

# கரியநிற மூக்குள்ள சிங்கம்

சிங்கக்குட்டிகள் பிறக்கும்போது, அவற்றின் மூக்கின் நுனிப்பகுதி இளம் சிவப்பு நிறமாகத் தோன்றுகின்றன. அவற்றின் வளர்ச்சியுடன் நிறமாற்றம் தோன்றுகின்றது. குறிப்பாக வளர்ச்சியடைந்த ஆண் சிங்கத்தின் மூக்கின் பாகங்கள் கருமை நிறமாக மாறுகின்றன. ஆண் சிங்கமொன்று முதுமை அடைந்துள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கு இந்த நிறமாற்றம் ஒரு அடையாளமாகவும் கருதப்படுகின்றது. ஆபிரிக்க நாடான தன்சானியா நொகொராங்கொரோ ஆகிய பகுதிகள் சிங்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் மேற்கொண்ட ஆய்வுகளில் இந்த உண்மையை மிகுனகோட்டா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வுகள் மூலம் அறிந்துள்ளனர்.





மேலும் சிங்கங்கள் குடும்பமாக வாழும் இயல்பினைக் கொண்டுள்ளன. மாறு வயதுகளில் குடும்பம் ஒன்றில் சிங்கக்குட்டிகள் காணப்படும்போது 9 மாதத்திற் குட்பட்ட குட்டிகளை வளர்ந்த ஆண்சிங்கம் கொன்றுவிடும் இயல்பும் காணப்படு கின்றது.

இதன்மூலம் வளர்ந்த சிங்கக்குட்டிகளைப் பலமும், வீரமும் கொண்டனவாக வளர்க்க முயல்கின்றன. இதனால் சிங்கங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதையும் அவதானித்துள்ளனர். மேலும் சிலர் சிங்கங்களைத் தமது வேட்டைத் திறனை வெளிப்படுத்துவதற்காகக் கொல்வதினால் இவற்றை அழிவின் விழிம்பிற்கு கொண்டு செல்கின்றனர். ஆனால், சிங்கத்தின் மூக்கில் காணப்படும் கறுப்பு நிறத்தை அடையாளம் கண்டுகொள்ளும்போது, இளம் சிங்கம் காப்பாற்றப்படுவதாக நேச்சர் எனப்படும் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

# கடல் ஆமைகள்

கடல் ஆமைகளில் ஐந்து இனங்கள் மிகுந்த அழிவுக்கு உட்பட்டுள்ளன. இறைச்சிக்காகவும், முட்டைக்காகவும் இந்த இனங்கள் பரந்தளவில் அழிக்கப்பட்டுவருகின்றன. அதிக நீண்ட வலைகளை உபயோகித்து மீன்பிடிக்கும் முயற்சியினால் - ஆமைகளின் இனம் அருகிக்கொண்டு செல்கின்றன. குறிப்பாக மிருகங்களின் தோலைப் போன்ற அமைப்பைக் கொண்ட ஆமைகள் (**Leather Back**) விரைவாக அருகிக்கொண்டு செல்வதாக அமெரிக்காவின் சர்வதேச இயற்கைப் பாதுகாப்புக்கான அமைப்பொன்று தெரிவித்துள்ளது.





மேலும் கடந்த 20 ஆண்டுகளில் இந்த இன ஆமைகள் 97 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளன. தரையில் கனாறி (**Canary**) எனபடும் பறவைகள் சூழல் மாற்றங்களுக்கேற்ப தமது இயல்புகளை மாற்றிக்கொள்வதைப்போன்று, கடல் ஆமைகள் நீரில் ஏற்படும் வெப்பமாற்றங்களுக்கேற்ப தமது இயல்புகளை மாற்றிக்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் ஆமைகள் முட்டையிடுவதற்காகக் கரையை நோக்கி நகர்கின்றன. சந்திரனின் ஒலியை நாடியே தரையில் நகர்வதாகவும் தெரிவிக்கபபடுகிறது. இதனால், கரையில் பிரகாசமான செயற்கை வெளிச்சங்களை நாடிச் செல்லும்போது, ஆபத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அதிகரிக்கும் வெப்பம்


சூழல் மாற்றத்தினால் பாதிப்புகள் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் நீண்டகாலமாகத் தெரிவித்து வருகின்றனர். ஆனால் அரசியல்வாதிகள் ஆக்கபூர்வமான முடிவுகள் எவற்றையும் எடுப்பதில்லை எனப் பிரித்தானிய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார். அண்மையில் இக்குழுவினர் பேராசிரியர் 'செல்ன் பேர்' தலைமையில் அமெரிக்க காங்கிரஸின் விஞ்ஞான அமைப்பில் தனது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். குறிப்பாகச் சூழலின் வெப்பநிலை அதிகரிப்பைத் தெரிவித்துள்ளார். கடந்த 20 ஆண்டுகளாகச் சூழல் வெப்பத்தின் அதிகரிப்பால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அரசியல்வாதிகளுக்குத் தெரிவித்துதிருப்பதுடன், பயங்கரவாதத்திலும் கூடுதலான பாதிப்பை சூழல் வெப்ப அதிகரிப்பு ஏற்படுத்தலாம் எனத் தெரிவித்தார்.



பொதுத் தேர்தல் 2004 - ஆதி

# உரிமைகளை மீட்டெடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம்

சலுகைகள் வேண்டாம். எமது உரிமைகள்தான் எமக்குவேண்டும். எங்கள் தாயக பூமியில் நாம் சுயநிர்ணய உரிமைகளுடன் வாழவும், எம்மை நாமே ஆளுகின்ற தன்னாட்சி அதிகாரத்தை எமக்கு வழங்கவேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்தும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினை ஆதரித்து,



யாழ்.குடாநாட்டில் மக்கள் ஆதரவை ஒருமுகப்படுத்துவதற்கான பணிகள் வேகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மதப்பெரியார்கள், தேசிய எழுச்சிப்பேரவையினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சமூகத்தினர் எனப் பல்வேறு தரப்பினரும் தமது தேசிய கடமையாகக்கொண்டு பரப்புரைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) யினர்- தமது கட்சி அனுபவங்களைச் சோடினை செய்தும், ஒலிபெருக்கிகள் மூலம் புரட்சிப் பாடலை ஒலிபரப்பி வருவதுடன், துண்டுப்பிரசுரங்கள் மூலம் தமக்கு வாக்களிக்குமாறு கேட்டுவருகின்றனர். அத்துடன், இராணுவத்தினர் மற்றும் பெலிஸாரும் இத்தகைய துண்டுப்பிரசுரங்களை ஈ.பி.டி.பி சார்பில் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

பொதுவாக, யாழ் குடாநாட்டில் போட்டியிடும் அரசியற்கட்சிகள் எட்டும் சுயேட்சைக்குழு இரண்டும் காணப்பட்டாலும், சில அரசியற் கட்சிகளும், ஒரு சுயேட்சைக்குழுவுமே தேர்தலுக்கான மிடுக்குடன் செயற்பட ஆரம்பித்துள்ளன. வாக்காளர்களைக் கவருவதற்காகப் பல்வேறு உத்திகள் கையாளப்படலாம்.

அவற்றில் சில கட்சிகள் தேர்தல் காலங்களில் - பொது மக்களுக்குச் சில நன்கொடைகள், வசதிகள், சலுகைகள் என்பவற்றை வழங்க ஆரம்பித்துள்ளதாக மக்களிடையே அளவளாவப்படுகின்றது.

சிலகட்சிகளும், சுயேட்சைக்குழுவும் கோடிக்கணக்கான நிதியினை இத்தேர்தலில் செலவிடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. எவ்வாறாயினும், தேர்தல் காலத்திலாவது இத்தகைய மனிதர்களது பணம் மக்களுக்குப் பயன்படட்டும்.

இலங்கையில் தமிழர்களை ஒழித்துக்கட்டவேண்டும். அல்லது தமிழர்களைப் பணியவைத்து, சிங்களவர்கள் அடக்கியாள வேண்டும் என்று பகற்கனவு காணும் ஜனாதிப திக்கு, வக்காலத்துவாங்கி அந்தப் பிச்சைப் பணத்தை தமிழ் மக்களின் வாக்கு வேட்டைக்காக முதலிட முயலபவர்களை - தமிழ் மக்கள் செவ்வனே அடையாளம் கண்டுள்ளனர்.

அதனைவிட அயல் நாட்டின் செல்லப்பிள்ளையாகவும், ஒற்றனாகவும், செயற்பட ஒத்துக்கொண்டு- தேசிய ஒற்றுமைக்கு மாசு கற்பிக்கும் பெரிய மனிதர்களையும் யாழ். மக்கள் நன்கு விளங்கிக்கொண்டுள்ளனர்.

யாவற்றிற்கும் எதிர்வரும் 13 ஆவது நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நல்லதொரு முடிவைக்கொண்டு வரவுள்ளது. முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் - யாழ். மாவட்டத்தில் குறிப்பிடத்தக்களவு மக்கள் ஆதரவை பெற்றுக்கொண்டவர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஆனால், தமிழர்களது தேசிய ஒற்றுமைக்கும், உரிமைக்கும் தன்னால் பங்கம் ஏற்படக்கூடாது என்று உணர்ந்து, தமிழர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து சமாதானத்திற்கான தேசிய சக்தியை ஆதரிக்கக்கோரி, யாழ். மாவட்டத்திலிருந்து விலகி, கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவது அவரது பெருந்தன்மையைக் காட்டிநிற்கிறது. அது மட்டுமன்றி, யாழ்.மாவட்டத்தில் அவர் தமிழர்களின் ஒற்றுமைக்காகப் பிரசார பணிகளிலும் ஈடுபடவுள்ளார். இத்தகைய செயற்பாடு அமைச்சர் மகேஸ்வரன் மீது யாழ்.மக்களுக்கு மட்டுமல்ல, ஈழத்து மக்கள் மத்தியிலேயே பெரும் மகிழ்சியையும் வரவேற்பையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றிபெறும் என்பதில் யாருக்கும் சந்தேகம் ஏற்படவில்லை. ஆனால், அளப்பரிய தியாகங்களைச் செய்து, உலக அரங்கிலேயே தனியொரு தேசிய இனமாக நிமிர்ந்து நிற்கும் தமிழினத்திலுள்ள காட்டிக்கொடுக்கும் கூட்டத்திற்கு இந்த நாடாளுமன்றத் தேர்தல் நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்.

15 வருடங்களாகச் சொந்த மண்ணை விட்டு இடம்பெயர்ந்து அலைந்து திரிந்து சீரழிந்துபோன மக்களுக்கு, இதுவரை எந்த நியாயத்தையும் பெற்றுக்கொடுக்காத அரசுகளும், அரசியல்வாதிகளும் - தேர்தல் வந்தவுடன், மக்களை மீளக்குடியமர்த்த ஆர்வம்காட்டி வருகின்றனர்.

அதற்காக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் - ஜனாதிபதியுடன் கதைத்தாராம். அதற்கு ஜனாதிபதியும் சாதகமான பதிலளித்தாராம். இதைத்தான் எமது மக்கள் "ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுத கதை" என்று சொல்வார்கள்.

விடுதலைப் புலிகள் மிகத் தெளிவாக கூறிவிட்டார்கள் - எமது உரிமைகளை மீட்டெடுக்க நாடாளுமன்ற ஆசனங்களைப் பயன்படுத்துவோம். நாடாளுமன்றத்தினூடான தமிழ்த் தேசியத்திற்கும், ஈழவிடுதலைப் போராட்டத்திற்கும் என்ன பலன் கிடைக்கமுடியுமோ, அதனைப் பெற வழிவகுப்போம். அதற்காகத் தமிழ் மக்கள் யாவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்போம். யாவற்றிற்கும் மேலாக தமிழர்களின் உரிமைகளும் சுயகௌரவமும் யாருக்கும் விலைபோகக்கூடாது. ஆகவே, அதனை விற்கக்கூடியவர்களை தமிழ் மக்கள் அடையாளங்கண்டு, ஓரங்கட்டவேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

# உயர் பாதுகாப்பு வலயத்தில் குடியமர வீட்டுச் சின்னத்துக்கே வாக்களியுங்கள்

## மா.க.ஈழவேந்தன் கோரிக்கை



உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள வீடுகளை மீட்பதற்கு, தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச்சின்னத்திற்கே வாக்களிக்கவேண்டும் என, தமிழ்த்தேசியக கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் வேட்பாளர் ம.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

வீடு பேறு அடைவதற்காக நாம் அனைவரும் வீட்டிற்கு. வாக்களிப்போம். எமது வீடுகளிற்குச் செல்வதற்காய் வீட்டுச்சின்னத்தை ஆதரிப்போம். மாலையும், சால்வையும் எமக்குப் பெரிதல்ல. மொழி உரிமைகளுக்காக இம்முறை நாம் வாக்களிக்க வேண்டும்.

மொழி அழியும்போது, இனம் இருந்ததாக வரலாறு இல்லை. எமது மரபுவழித்தாயகம் சிலாபம் வரை பரவி இருந்தது. ஆனால், இன்று திருமலையில் ஒரு ஆசனத்தைப் பெறுவதே பெரிய பாடாய் உள்ளது.

திருமலையில் தமிழர்கள் அரிதாகிவிட்டார்கள். திரியாய் முதல் முல்லைத்தீவுவரை கரையோரங்களை ஆக்கிரமிக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. 'தமிழன் வாழாத நாடில்லை - ஆனால், தமிழனுக்கென ஒரு நாடில்லை.' இந்நிலை தொடர்வது எமக்கு ஏற்புடையதல்ல.

நாம் களமிறங்காவிட்டால் ஈ.பி.டி.பி 10 வாக்குகளுடன் நாடாளுமன்றம்போகும். ஆனந்தசங்கரி சபாநாயகராவார். ஆனந்தசங்கரி வெகுவிரைவில் வாயைப் பூட்டிக்கொண்டு உள்ளே இருக்கப்போகிறார். அதற்கு வசதியாகவே பூட்டைத் தேர்ந்தெடுத்து வைத்துள்ளார்.

இந்திய அரசியலில் நாம் மாற்றத்தை உண்டுபண்ணவேண்டும். அதனூடு உலக மாற்றத்தை உண்டுபண்ணவேண்டும் எனவும் அங்கு அவர் மேலும் தெரிவித்தார். (111)

# தமது உணர்வுகளை வெளிப்படுத்த தமிழருக்கு நல்லதொரு சந்தர்ப்பம்

## பத்மினி சிதம்பரநாதன் தெரிவிப்பு



ஏப்பிரல் இரண்டாம் திகதி பொதுத் தேர்தலல்ல, மற்றுமொரு பொங்கு தமிழ் நிகழ்வே இடம்பெறவுள்ளது. முன்னர் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகளிலே மக்கள் எவ்வளவு உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டார்களோ, அதேபோல ஏப்பிரல் இரண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும் கலந்துகொள்ள வேண்டுமெனத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் பெண் வேட்பாளரான பத்மினி சிதம்பரநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்களுக்கான தேர்தல் பிரசார முன்னோடிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் - பயந்து, ஒடுங்கி, அடங்கிக்கிடந்து, இராணுவத்தினரால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த எமது மக்கள்- தமது அபிலாசைகளை பொங்கு தமிழ் நிகழ்வு மூலமாக எடுத்துச் சொன்னார்கள். திறந்தவெளி சிறைச்சாலையாக இருந்த குடாநாட்டிலே, அந்த உணர்வெழுச்சியும் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டது.

அதன் பின்னும் அடக்கப்பட்ட மக்கள் மீண்டும் துணிவு கொண்டெழுந்து மீண்டுமொரு பொங்குதமிழ் எழுச்சிபூர்வமாக இடம்பெற்றது. இதனைக்கூட சில இனவாதிகளும், இனவாத போக்குக்கொண்ட பத்திரிக்கைகளும் புரட்டிக் காட்டினார்கள். புலிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சியே மக்கள் வந்ததாக எழுதினார்கள், பேசினார்கள். அதனைச் சில சர்வதேச நாடுகளும் ஏற்றுக்கொண்டன.

இன்று சந்திரிகா எமக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தைத் தந்துள்ளார். நாம் அனைவரும் எமது உணர்வுகளை வெளிப்படுத்த நல்லதொரு சந்தர்ப்பம். இந்த பொதுத்தேர்தலில் நாம் வெளிப்படுத்தும் உணர்வு, ஒரு ஆவணமாகப் பதியப்படும். எனவே, மக்கள் இதனை ஒரு பொங்கு தமிழாகவே கருதவேண்டும்.

இருபது வருட யுத்தத்தினால் எமது வாழ்வு வேரோடு பிடுங்கி எறியப்பட்டு, அகதிகளாகிச் சின்னாபின்னமாகி இடம்பெயர்ந்தோம். புரிந்துணர்வு உடன்பாட்டிக்குப் பின்பு எமது சொந்த வீடுகளுக்குச் செல்லலாம் என எண்ணினோம்.

ஆனால், முடியவில்லை. இந்தத் தேர்தலில் தமிழ் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன்மூலம் அதனை நிறைவேற்றுவோம்.

பெண் என்றால் அடங்கிக் கிடப்பவள் என்ற நிலையை எமது தேசியத் தலைவர் மாற்றிக்காட்டினார். பெண்களின் பலத்தை உலகிற்கு காட்டினார். அதன்மூலமாக எம்மை விடுதலையின் வாசம் உணர அழைத்து வந்துள்ளார். தேர்தலிலும் பெண்கள் தமது பங்கைச் சிறப்பாகச் செய்யவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரதிநிதிகள், தமிழ் கூட்டமைப்பு வேட்பாளர்களில் ஒருவரான இ.சிவனேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (94)

# அச்சத்துக்கு அடிபணியும் துர்ப்பாக்கியம் தோன்றக்கூடாது

## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

சக்கோட்டையில் கடற்தொழிலாளர் சமாசம் நடத்திய கண்டனக் கூட்டத்தில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆற்றிய உரையின் சாராம்சம்.

கடற்தொழில் என்பது ஒரு ஜீவ மரணப் போராட்டம். கடலில் தொழிலுக்குக் குதித்தவன் தரையில் கால் வைக்கும்வரை அவன் உயிருக்கு உத்தரவாதமில்லை. இத்தகைய பயங்கரத் தொழிலைச் செய்பவர்கள் ஏழை மீனவர். கடந்த காலங்களில் கடலிலும் தரையிலும் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, போர் ஓய்ந்து நிம்மதிப் பெருமூச்சு பலரிடம் எழத்தான் செய்தன. ஆனால், கடற்தொழிலாளர் மட்டில் இன்றும் அவலக்குரலைத்தான் கேட்கக்கூடியதாக இருக்கின்றது. கடலில் மீனவரைப் பொறுத்தவரை போர் ஓயவில்லை, கொலைகள் குறையவில்லை, உடமைகள் பாதுகாக கப்படவில்லை. அண்மையில் நடந்த சம்பவம் இந்த உண்மையை மெய்ப்பிககத் தவறவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கடலில் திட்டமிட்டு மீனவர் படகுகள் அழிக்கப்படுகின்றன. மீனவர்கள் வாள் கொண்டுவெட்டப் படுகின்றனர். உயிரற்ற சடலம் கடலில் தேடிக்கண்டுபிடிக்க முடியாதளவுக்குக் கடலில் வீசப்படுகின்றது. கடந்த திங்கடகிழமை வெட்டுக் காயங்களுடன், மீனவரொருவர் கடலில் காணாமல்போய் சடலமாக மீட்கப்பட்டார்.

கடலில் குதித்தால் கடற்படை. தரைக்கு மீண்டால் படையினர் என, கடற்தொழிலாளரை அழிப்பதற்கென்றே இலங்கைப் பாதுகாப்புப் படைகள் அமர்த்தப்பட்டுள்ளதாக மக்கள் கொதிக்கின்றார்கள், குமுறுகின்றார்கள். இந்திய மீனவரைப் பாதுகாப்பதில் இந்திய கடற்படையும் இலங்கைப்படையும் கைகோர்த்து நிற்கின்றன. அதே தீவிரத்தை எமது கடற்தொழிலாளரை அழிப்பதிலும் காட்டிவருவதை மறுப்பதற்கில்லை. நாம் விழிப்பாயில்லையென அவர்கள் நினைக்கின்றார்கள்போலும். நாம் தூங்கவில்லை. இதன் தாக்கங்கள் சாதாரணமானவையல்ல. விளைவுகள் விபரீதமாக முடியக்கூடாதென்றே நாம் விரும்புகின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை விசேடமாகக் கடற்தொழிலாளரைப் பொறுத்தவரை சிவில்பாதுகாப்பென்பது கேலிக்கூத்தாகிவிட்டது. கடலிலும் தரையிலும் திட்டமிட்டுத் தாக்கும் அரச படைகளும் உளவுப் படைகளுமா எமது பாதுகாவலர்? கடலில் காணாமல் போன மீனவரைப் பற்றி இதுவரை வாயே பேசாத சிவில் நிர்வாகமா எமது மக்களைப் பாதுகாப்பது?

இந்திய மீனவர் தவறாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். பெரும்பாலும் இவர்கள் கூலிக்கு அமரத்தபபட்ட அப்பாவிகள். புரிந்துணர்வு, போர் நிறுத்தம் என்பவற்றைச் சிதைத்து, வலிந்து எம்மைப் போருக்குச் சீண்டும் செயலை மறைந்திருந்து செய்யும் சதிகாரக் கும்பல்களால் ஏற்



படப்போகும் விளைவுகள் நல்லவையாக அமையமாட்டாது.

மனித உரிமைக்குழு, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு போன்றவை எங்கள் மக்களின் உள்ளக் குமுறல்களை உணர்ந்து, விரைந்து செயற்படவேண்டும். இல்லையெனில் விளைவுகள் விபரீதமாகி மக்கள் கொதித்தெழும்போது, அச்சத்திற்கு அடிபணிந்து நாமும் தோள்கொடுக்கும் துர்ப்பாக்கியநிலை தோன்றக் கூடாததென்றே விரும்புகிறோம்.

இவ்வாறு, பருத்தித்துறைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகிக் கடலில் காணாமற்போனவருக்கும், காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இருவருக்குமான அனுதாபக் கண்டனக் கூட்டத்தில் சக்கோட்டை சவேரியார் முன்றலில் பேசும்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (13)

யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்*
*இலைத்திருந்து எண்ணிக் கொளல்*

திருக்குறள்

# நமது நோக்கு

## வாக்குரிமை மறுப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் வாழும் மக்களின் வாக்குரிமை தொடர்பான சர்ச்சைகள் தற்போது வலுப்பெற்றிருக்கின்றன.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டில் வசிக்கும் வாக்காளர்கள்- இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லவிடாமல் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டனர்.

வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் இடம்பெற்ற இத்தகைய சம்பவங்களுக்கு பொறுப்பானவராக இருந்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல உயர் நீதிமன்றினால் கண்டிக்கப்பட்டதுடன், அவருக்கு அபராதமும் விதிககப்பட்டது.

இந்தமுறை தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தாம் தடையாக இருக்கப்போவதில்லை என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

இதனால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க-

இன்னொரு புறத்தில் பொருத்தமான இடத்தில் கொத்தணி வாக்குச் சாவடிகளை அமைப்பது தொடர்பாகவும் சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

இங்கே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிக்கும் சுமார் இரண்டரை இலட்சம் மக்களின் வாக்குரிமை பற்றிச் சிந்தனையின்றி - இந்த மக்களின் வாக்குரிமையினால் தமது அரசியல்லாபம் பாதிக்கப்பட்டுவிடும் என்ற நோக்கத்திலேயே சில அரசியல் கட்சிகள் பார்க்கின்றன.

ஜே.வி.பி - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வாக்குரிமை - அவர்கள் வசிக்கும் பகுதிகளில் பயன்படுத்தப்படுவதற்கு முற்றுமுழுதாகவே எதிர்ப்புத் தெரிவித்திருப்பது அதன் சுயரூபத்தை இன்னொரு தடவை வெளிக்காட்டியிருக்கிறது.

இலங்கையில் ஒற்றையாட்சியே இருக்க வேண்டுமென்று வலியுறுத்தும் ஜே.வி.பி போன்ற சக்திகள், புலிகளின் பகுதி மக்களின் ஜனநாயக உரிமையான வாக்குரிமையைப் பறிப்பதிலேயே குறியாக இருக்கின்றன.

புலிகளின் பகுதிகளில் தேர்தல் நடத்தக்கூடாது என்று கூச்சல் போடும் இந்தச் சக்திகளின் அச்சம் - தமது அரசியல் இருப்புக் குறித்ததாகவே இருக்கிறது.

அதேவேளை - கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச நுழைவாசல்களில் அமைக்கப்படுவது குறித்து இப்போது அதிகமாகப் பேசப்படுகிறது. இராணுவ சூனியப்பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதில்கூட இழுபறிகள் நிலவுகின்றன.

கண்ணிவெடிகள் என்றும், பாதுகாப்பில்லை என்றும் இதற்குக் காரணங்கள் கூறப்பட்டு வருவதையும் காண முடிகிறது. தேர்தல் நடப்பதற்கு இன்னும் ஒரு மாதம் முழுமையாக இருக்கின்றது.

இராணுவ சூனியப்பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றிப் பாதுகாப்பான சோதனைச் சாவடிகள் அமைக்கலாம். அதற்கு சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு என்பவற்றின் உதவியை நாடலாம்.

இதற்கெல்லாம் வழிவகைகள் இருந்தும், அதைப்பற்ற தேர்தல் ஆணையாளரோ அன்றி வேறெந்த அதிகாரபூர்வதரப்போ பேசுவதைக் காணவில்லை. எப்படி தேர்தல் நடத்தாமல் விடலாம் என்பதில்தான் குறியாக இருக்கின்றனர்.


இராணுவச் சோதனைச் சாவடிகளைத் தாண்டி வந்து வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என்ற இலக்கை இவர்கள் நிர்ணயிப்பதில் காட்டப்படும் ஆர்வம் - இந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் வாக்குரிமையை மட்டுப்படுத்துவதை இலக்காகவே கொண்டிருக்கிறது.

சோதனைகளைத் தாண்டிவந்து இலட்சக்கணக்கான மக்கள் வாக்களிப்பது ஒருபோதும் சாத்தியமற்றதென்பதால் - அப்படியே நடத்த வேண்டும் என்றுதான் ஜே.வி.பி போன்ற கட்சிகள் விரும்புகின்றன.

இவ்வாறு சோதனை நிலையங்களைத் தாண்டிவந்து தமிழ்மக்களை வாக்களிக்க கூறுவது நிச்சயமாக அவர்கள் வாக்குரிமையை நசுக்குவதாகவே அமையும்.

இவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வாக்குரிமை நிராகரிக்கப்படுவது தமிழ்மக்களைத் தேசிய அரசியலில் இருந்து தனியே பிரித்து ஒதுக்கிவிடும் என்பதைக் கவனத்தில் கொள்வதும் அவசியமாகும்.

## நாடும் நடப்பும்



# நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலே முஸ்லிம்களின் தீர்வு ஆராயப்படும்

### அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படுகின்றபட்சத்திலேயே, அங்கு முஸ்லிம் மக்களுக்கான தீர்வுகளை உரியமுறையில் ஆராயமுடியும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம் - அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து போட்டியிடுவது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயாகும். அமைச்சுக்கள் தொடர்பான விடயம் இங்கு முழுமையாகத் தரப்படவில்லை. பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களினது கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்தே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஜே.வி.பியினர் உறுதிமொழி!

### ஹிஸ்புல்லா கூறுகிறார்

சமாதானப் பேச்சுக்களின் மூலம் இன்றைய பேச்சுக்களுக்குத் தீர்வு காணப்படும் என ஜே.வி.பி. அளித்த உறுதிமொழியை அடுத்தே, ஐக்கிய சுதந்திர முன்னணியில் இணைந்து தாம் செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மட்டக்களப்பு வேட்பாளரும், தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித்தலைவருமான ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

ஏறாவூரில் நடைபெற்ற தோதல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமது கட்சி - முஸ்லிம் மக்கள் தொடர்பில் கொடுத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதாலேயே, தாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் சேர்ந்துகொண்டதாக அவர் குறிப்பிட்டார். (01)

# வடக்கு-கிழக்கு வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தயார்!

### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களுக்குரிய பாதுகாப்புக்களை வழங்குவதற்கான சகல பாதுகாப்பு ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாகப் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

இராணுவத்தளபதியுடன் இது தொடர்பாகப் பேச்சு நடத்தியுள்ளதாகவும், வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாகக் கேள்வி எழுந்த நிலையிலேயே, இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. (01)

# ஜனாதிபதி பொய் கூறுவாரென்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும்!

### அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

ஜனாதிபதி வாயைத்திறந்தால் பொய்தான் கூறுவாரென்று விமல் வீரவன்ச, சோமவன்ச போறோருக்குத் தெரியாவிட்டாலும், நாட்டுமக்களுக்குத் நன்றாகவேதெரியும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் என்று கூறிக்கொண்டிருந்த ஜனாதிபதி, திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்தார். 1994 ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவேன் என்று கூறியவர், இன்றுவரை அதைச செய்யவில்லை.

இவர்களுக்கு ஏப்ரல் 2 ஆம் திகதி சிறந்த பாடத்தை மக்கள் புகட்டுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பேருவளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பெருந்தோட்டத்துறை அமைச்சராக இருந்தபோது, அவருக்குத் தெரியாமல் அந்த அமைச்சுக்காக 10 மில்லியன் ரூபா பெறப்பட்டு, ஜனாதிபதி சந்திரிகாவால் செலவளிக்கப்பட்டது.

இதில் 541 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

இது தொடர்பாகப் புலனாய்வுப் பிரிவினர் விக்கிரமநாயக்காவிடம் கேட்டபோது - தனக்கு இது தொடர்பாக ஒன்றும் தெரியாதென்றும், ஜனாதிபதியே அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார் என்றும் தெரிவித்தார்.

இதனாலேயே, அவருக்கு இந்தமுறை வேட்பாளர் பட்டியல் மற்றும் தேசியப்பட்டியலிலும் இடம் கிடைக்கவில்லை.

நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டவிதிகளின்படி- தேசியப் பட்டியலில் இடம்பெறாத ஒருவரை எவ்வாறு தேசியப்பட்டியலுக்கு உட்படுத்துவது என்று ஜனாதிபதிக்கு சவால் விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 25 ஆயிரம் அகதிகளே வாக்களிக்க விண்ணப்பம்

### பவ்ரல் அமைப்பு கூறுகிறது

நாட்டில் ஒரு லட்சத்து இருபத்தேழாயிரம் இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த ஒரு லட்சத்து இருபத்தேழாயிரம் பேரில், தேர்தலில் வாக்களிப்பதற்கு 25 ஆயிரம் பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த தகவலை பவ்ரல் அமைபபு வெளியிட்டுள்ளது. அதன் தலைவர் கிங்ஸி றொட்டிக்கோ இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்- கடந்த 2001 ஆம் ஆண்டில் 35 ஆயிரம் அகதிகள் தங்கள் வாக்குகளைச் செலுத்துவதற்கு விண்ணப்பித்திருந்தனர். ஆயினும், இந்த தடவை 25 ஆயிரம் பேரே விண்ணப்பித்துள்ளனர். இந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு- அவர்கள் மத்தியில் காணப்பட்ட அதிருப்தியே காரணம் எனக் கூறப்படுகின்றது. (01)

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XVIII - சிவா சின்னப்பொடி

'நீங்கள் கஷ்டப்படுகின்றீர்கள்...
நீங்கள் துன்பப்படுகிறீர்கள்...
உங்களுக்கு வாழ்க்கையில் அமைதி கிடைக்கவில்லை...
இதற்கெல்லாம் என்ன காரணம் தெரியுமா?
நீங்கள் பாவத்தைச் சுமக்கிறீர்கள்...
பாவமூட்டையைச் சுமக்கிறீர்கள்... இதிலிருந்து உங்களுக்கு விடுதலை வேண்டும்...
அதுதான் உண்மையான விடுதலை...
அதைத் தரக்கூடியவர் ஒரே ஒருவர்தான்...
அவர்தான்..."

என்று உள்ளத்தைக் கொள்ளும்விதத்தில் - அன்பைச் சொரியும் வார்த்தைகளை உதிர்க்க, ஏற்கனவே அந்நியமாதலால் அவதிப்பட்ட நமது பெண்களுக்கு, இது ஒரு ஆறுதலாக - அவர்களது மனக்குழப்பதை வெளிப்படுத்துவதற்கான ஒரு வடிகாலாக அமைய, இந்த மதக்குழுக்கள் சுலபமாக - அதேநேரம் விரைவாகப் புலம்பெயர்ந்த தமிழ்க் குடும்ப



# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

அமைப்புக்குள் புகுந்துகொண்டன.

1988 இற்கும் 1993 இறகும் இடைப்பட்ட காலத்தில் மிக அதிகளவுக்கு இந்த அடிப்படைவாத மதக்குழுக்கள் நம்மவர்கள் மத்தியில் ஊடுருவ ஆரம்பித்தன. குறிப்பாகப் பாரிஸ் நகரத்தின் புறநகர்ப் பகுதிகளிலும், ஜேர்மனியின் பிராங்பேட், சுருட்காட், எசன் நகரப் பகுதிகளிலுமே இந்த ஊடுருவல் அதிகமாக இருந்தது.

பாரிஸ் நகரத்தில் இந்த மதக்குழு ஒன்றின் வலைக்குள் சிக்கிய இளைஞன் ஒருவன் - நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த தனது சொந்த அக்காவின் வயிற்றில் சாத்தான் வளர்வதாகக் கனவு கண்டுவிட்டு, அக்காவையும் அவள் வயிற்றில் வளர்ந்த குழந்தையையும் கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவம் புலம்பெயர்ந்த தமிழர்களை அதிரவைத்த ஒன்றாக இருந்தது.

அந்தக் குடும்பம் யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியைச் சேர்ந்தது.

கணவர் 1983 ஆம் ஆண்டும், மனைவி 1988 ஆம் ஆண்டும் பிரான்ஸுக்குச் சென்றிருந்தனர்.

குடும்பத் தலைவியின் தம்பி - 1989 ஆம் ஆண்டு பிரான்ஸுக்குச் சென்றிருந்தான்.

இவர்கள் அனைவரும் பாரிஸின் புறநகர்ப் பகுதியான 'பொபினி'யிலுள்ள தொடர்மாடிக் கட்டடம் ஒன்றில் குடியிருந்தனர். மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்த இந்தக் குடும்பம் - 1990 ஆம் ஆண்டு அந்த அடிப்படைவாத மதக்குழுவின் வலையில் விழுந்தது.

இங்கே தாயகத்தில் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த இவர்கள் - அந்த அடிப்படைவாத மதக்குழுவின் பிரசாரத்தில் எடுபட்டு, கத்தோலிக்க திருச்சபை உட்பட மற்ற அனைத்து மதங்களும் சாத்தானின் மதங்கள் என்று அவர்கள் கூறியதை நம்பினார்கள்.

தாயக விடுதலை என்பதும், அதற்கான விடுதலைப் போராட்டம் என்பதும் பாவத்தைச் சுமக்கும் - சுமக்கவைக்கும் சாத்தானின் செயற்பாடுகள் என்று விமர்சித்த இவர்கள், தாயக விடுதலைச் செயற்பாட்டாளர்கள் - தங்கள் மத அமைப்பைச் சேர்ந்தவர்களது வீடுகளுக்குச் சென்றால், 'நாங்கள் சாத்தான்களை எங்கள் வீடுகளுக்குள் அனுமதித்து, பாவமூட்டையைச் சுமக்கத் தயாராக இல்லை' என்றும் சொல்லவைத்தனர்.

இந்த மதக்குழுவின் பிரசாரத்தில் மயங்கி, இந்தக் குடும்பத்தினர் செய்த வேலையையும் விட்டுவிட்டு - முழுநேர மதப் பிரசாரகார்களாக மாறினார்கள்.

படம் பார்ப்பதில்லை, பாட்டுக் கேட்பதில்லை, தங்கள் மதக்குழுவில் சேராதவர்கள் வீடுகளில் சாப்பிடுவதில்லை, அவர்களது வீட்டு நன்மைதீமைகளில் கலந்துகொள்வதில்லை என்று தங்களைத் தாங்களே குறுக்கிக் கொண்ட இந்தக் குடும்பத்தின் தலைவி - 1995 ஆம் ஆண்டு கர்ப்பம் தரித்திருந்தார். அந்த வருடம் டிசம்பம் மாதம் 6 ஆம் திகதி அவருக்கு குழந்தை பிறக்கும் என்று மருத்துவர்கள் எதிர்வுகூறியிருந்தனர்.

நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அந்த மதக்குழுவின் முக்கிய பிரசாரக்கூட்டம் ஒன்று நடந்தது. அந்த மதப் பிரசாரக் கூட்டத்தில் பிரசங்கம் செய்த மதபோதகர் - சாத்தான்களின் ஆதிக்கம் பூமியில் அதிகரித்துவிட்டது, சாத்தானால் உலகம் அழியப்போகின்றது, சாத்தான்கள் மனிதரிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக்கொள்ளப்போகின்றது என்று சாத்தானைப்பற்றியே இரண்டு மணிநேரம் போதனை செய்திருக்கிறார்.

அந்தப் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு வந்த அந்தக் குடும்பத்தின் தலைவியின் தம்பிக்கு (19 வயது) அன்றிரவு உறக்கம் வரவில்லை. அவனது நினைப்பு முழுவதும் சாத்தானைப் பற்றியே இருந்தது.

தனது அக்காவின் வயிற்றில் வளரும் ஆண்குழந்தை ஏன் ஒரு சாத்தானாக இருக்கக் கூடாது என்ற விபரீத எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்துடனேயே அவன் உறங்கிவிட்டான்.

மறுநாள் அதிகாலையில், அவனது அக்கா கழிப்பறை செல்வதற்காக எழுந்துவந்தபோது, சத்தம்கேட்டு விழித்த அவன் - சமையல் அறைக்குச் சென்று, கூரிய கத்தியொன்றை எடுத்துவந்து 'சாத்தானைக் கொல்கிறேன்.. சாத்தானைக் கொல்கிறேன்...' என்று கத்தியவாறு, அக்கா வயிற்றில் மூன்று குத்துக் குத்திவிட்டான்.

முதல் குத்து மேல் வயிற்றிலும், அடுத்த இரண்டு குத்துக்களும் கர்ப்பப்பையை ஊடுருவி, குழந்தையின் மீதும் விழுந்தது. அந்தப் பெண்ணின் கணவன் மதப் பிரசாரத்துக்காக வெளியில் சென்றிருந்தநிலையில், பக்கத்து வீட்டுக்காரர் காவல்துறையினருக்குத் தகவல் தெரிவிக்க, அவர்கள் வந்து வீட்டுக்கதவை உடைத்து உள்ளே நுழைந்தபோது, தாயினதும், கருவிலிருந்த குழந்தையினதும் உயிர் போயிருந்தது.

தனது அக்காவையும், தனது மருமகனான பிஞ்சுக்குழந்தையையும் கொன்றுவிட்ட பதட்டமோ, பயமோ எதுவுமின்றி - மதப்பிரசாரப் பாடலை ரேப்பில் போட்டுக்கேட்டபடி இருந்த இளைஞனை, காவல்துறையினர் கைதுசெய்து விசாரித்தபோது...

**தனது அக்காவையும், தனது மருமகனான பிஞ்சுக் குழந்தையையும் கொன்றுவிட்ட பதட்டமோ, பயமோ எதுவுமின்றி - மதப்பிரசாரப் பாடலை ரேப்பில் போட்டுக் கேட்டபடி இருந்த இளைஞனை, காவல்துறையினர் கைதுசெய்து விசாரித்தபோது...**

தான் இந்த உலகத்துக்கு வரவிருந்த புதிய சாத்தானையும், அந்தச் சாத்தானைச் சுமந்த பெரிய சாத்தானையுமே கொலைசெய்ததாக ஒப்புக்கொண்டான்.

நம்மவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தை - அப்போது நான் பாரிஸிலுள்ள ஈழமுரசுப் பத்திரிகையில் முதற்பக்கச் செய்தியாக வெளியிட்டபோது, குறிப்பிட்ட மதக்குழு - காட்டமான வாசகங்களுடன் கூடிய மறுப்பறிக்கை ஒன்றை அனுப்பிவைத்திருந்தது. நான் அந்த மறுப்பறிக்கையைப் பிரசுரித்ததுடன், 'SECT' (செக்ட்) எனப்படும் இந்த மதக்குழுக்களால், சமூகத்துக்கு ஏற்படும் தீங்கு பற்றி 'லு பிகாரோ' பத்திரிக்கையில் வெளிவந்த கட்டுரை ஒன்றையும் மொழியாக்கம் செய்து வெளியிட்டிருந்தேன்.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று வருடங்களின் பின்னர் பாரீஸ் நகரச்சிறைகளில் இருக்கும் ஈழத்தமிழர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டமுற்பட்டபோது, எதிர்பாராத விதமாக அந்த இளைஞனைச் சந்தித்தேன். 8 வருட சிறைத்தண்டனை பெற்று சிறையில் இருந்தபடி தொழிற்கல்வி கற்றுவந்தான். 'உனது சொந்த அக்காவை கொலை செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது' என்று நான் அவனைக் கேட்டபோது - கொஞ்சநேரம் மௌனமாக இருந்துவிட்டு 'உண்மையில் நான் பெரிய பிழைசெய்துவிட்டேன். எல்லாம் அந்த போதகரின் வேலை' என்றான். 'போதகர் சொன்னால் அதை அப்படியே கேட் கிறதுக்கு உனக்குப் புத்தியில்லையா?' என்று நான் அவனைத் திருப்பிக்கேட்க-

'ஐயோ அண்ணா உங்களுக்கு அவையை பத்தி தெரியாது. அவர்கள் ஆக்களை வசியம் பண்ணுறதிலை கெட்டிக்காரர்' என்றான்.

இந்த இளைஞனைப்போல் நிறையப்பேர் (ஆண்கள்-பெண்கள்) இந்த மதக் குழுக்களின் வலையில் சிக்கி, தங்களது வாழ்க்கையைத் தொலைத்திருக்கிறார்கள்.

இந்த மதக் குழுக்களைத் தடைசெய்வது தொடர்பாக ஆராய்ந்த பிரான்ஸ் உள்நாட்டு அமைச்சு மேற்கொண்ட கணிப்பீட்டின்படி - 12 வீதமான தமிழர்கள் (பாண்டிச்சேரிக்காரர்கள் உட்பட) 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த மதக் குழுக்களில் அங்கம் வகித்தனர் (ஆபிரிக்கர்கள் 48 வீதம்).

எனக்கு கிடைத்த உறுதிப்படுத்திய தகவலின்படி 1994-95 காலப்பகுதியில் ஜேர்மனியில் மட்டும் 16 புலம்பெயர்ந்த தமிழ் குடும்பங்கள் இந்த மதமாற்றப் பிரச்சினை காரணமாக மணவிலக்குப் பெற்றிருந்தனர்.

எல்லா மதங்களுமே அன்பையும், கருணையையும் போதிப்பதாகவும், சமாதானத்தையே விரும்புவதாகச் சொல்லிக்கொண்டாலும், நடைமுறையில் ஒவ்வொரு மதமும் மற்ற மதத்தைத் தூற்றுகின்ற வேலையையும், மக்களிடையே பிளவுகளை உண்டாக்குகின்றன. மதம் என்பது மக்களின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

ஒவ்வொரு இனத்திலும் இருந்த நம்பிக்கைகள் மற்றும் இறையியல் கோட்பாடுகள் அடிப்படையிலேயே மதநிறுவனங்கள் தோற்றம் பெற்றன. எந்தவொரு மதமும் - தன்னுடைய தளத்திலிருந்து அரசியல் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, இன்னொரு மதத்தின் இயங்குதளத்துக்குள் ஊடுருவுகின்ற பொழுதுதான் பிரச்சினையே ஏற்படுகின்றது. எந்தவொரு மதமும் தன்னுடைய மதக்கருத்தியலின் நியாயத்தன்மையை நிறுவுவதற்காக இன்னொரு மதத்துடன் கருத்தியல்ரீதியாக மோதுவதில் நாம் தலையிடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், இந்த கருத்தியல் மோதல் என்பது அரசியல் நோக்கம்கொண்டதாக இருக்குமானால்...

ஒரு இனத்தின் மெய்யியல் அடையாளத்தைச் சிதைத்து - அதன்மூலம் அந்த இனத்தின் அரசியல் அடையாளத்தை ஒழித்துக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்குமானால் அது கவனிக்கப்படவேண்டிய - தடுக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

சிங்கள பேரினவாத அரசியல் நலனை நோக்கமாகக்கொண்டு தேரவாத பௌத்த மதத்தை தமிழ்மக்கள் எதிர்ப்பது இந்த அடிப்படையில்தான்.

புலம் பெயர்ந்த நாடுகளைப் பொறுத்தவரை - தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து இனங்களையும், நாடுகளையும் சேர்ந்த புலம்பெயர்ந்த மக்களுக்கும், அதிதீவிரமான அடிப்படைவாதக் கோட்பாடுகளைக் கொண்ட மதக்குழுக்களின் செயற்பாடுகள் பெரும் பிரச்சினையாகவும், அச்சுறுத்தலாகவும் இருந்தது. அதற்கு காரணம் இந்த மதக் குழுக்களின் நோக்கம் உண்மையான ஆன்மீகத் தளத்தைக் கொண்டிருக்காததே.

(தொடரும்)

## தேர்தல் களம் — த.அறிவன்

# கதிரைக்கு வாக்களிக்காமல் கருத்துக்கு வாக்களிப்போம்

இம்முறை நாடாளுமன்றத்துக்கான தேர்தல் - தமிழ் மக்களுக்கு, நாடாளுமன்ற ஆசனங்களுக்கானது அல்ல. இந்த ஆசனங்களால் கடந்த காலங்களில் எதனையும் சாதிக்க முடியவில்லை. இனியும் அதுமுடியும் காரியமல்ல. ஆனால், இந்தத் தேர்தல் தமிழ் மக்களது உரிமைகள் தொடர்பான கருத்தினைத் தெரிவிக்கும் நிர்வாகமயப்பட்ட ஜனநாயக முறைமையாகும். ஏற்கனவே பொங்குதமிழ் மூலம் தமிழ் மக்கள் தமது கருத்தினைத் தெரிவித்துவிட்டனர். இந்தத் தேர்தல் தமிழ் மக்கள் - அரசியல் நிர்வாக முறையின்படி தமது கருத்தைத் தெரிவிப்பதாகும்.

தமிழ்த் தேசவிரோதக் குழுக்கள் - தமக்கே தமிழரின் ஆதரவுண்டு என மார் தட்டிக்கொண்டிருக்கின்றன. உண்மையில் தமிழ் மக்கள் - எதிரியின் கால்களைப்பற்றிக் கிடக்கும், தமிழர்களின் உரிமைகளை விற்பவர்களுக்கு வரலாற்றில் என்றுமே ஆதரவளித்தது கிடையாது. 1956 முதல் தமிழ் மக்கள் தேர்தல்களின்மூலம் இதனை நிரூபித்தனர். முதலில் தமிழரசுக்கட்சி, பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி, அதன்பின் ஈரோஸ், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என அது தொடர்கின்றது. இந்தத் தேர்தல்களில் தமிழ்த் தேசியத்துக்கான கட்சிகளை தமிழ்மக்கள் மிகப்பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றி பெறச் செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை தீர்மானப்படி தமிழீழத்துக்கான வாக்குகள் என, 1977 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குகள் - தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே போடப்பட்டது. இதற்கடுத்த தேர்தல் 1989 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இந்திய இராணுவம் - தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நின்ற காலத்தில், தமிழ் மக்களைக் கொடூரப்படுத்திய குழுவினர், தமிழ் மக்களின் ஆதரவு பெற்றவர்கள் தாம் என்பதை நிரூபிப்பதற்காக அந்த தேர்தலை பயன்படுத்தமுயன்றனர். இந்திய இராணுவ ஆதிக்கத்தை எதிர்த்து தமிழ்த்தேசியத்தின்பால் ஈரோஸ் அத்தேர்தலில் நின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவின் பேரில் இத்தேர்தலில் ஈரோஸ் போட்டியிடுவதாக அப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் கருத்துக்கள் பரவியிருந்தன.

இந்திய இராணுவ கொடுமைகள், முற்றுகைகள் நிறைந்திருந்த அன்று, மக்கள் மிகத் துணிச்சலாக அஞ்சாது வாக்குச்சீட்டில் இலகுவில் தெரியத்தக்கதாக இருக்காதிருந்த வெளிச்சவீட்டைத் தேடி வாக்களித்து, ஈரோசின் வேட்பாளர்களுக்குப் பெரும்வெற்றியை ஈட்டிக்கொடுத்தனர்.

உண்மையில் மக்கள் அங்கு யாருக்கு வாக்களித்தனர் என்பது தெளிவான நிலைப்பாட்டில் இருந்தனர் என்பதை அக்காலத்தில் நிரூபித்த தேர்தல் அது. மிகக்குறுகிய காலத்தில் ஈரோஸ் உறுப்பினர்கள் தமது நாடாளுமன்ற ஆசனங்களைத் துறந்து, தம் நோக்கத்தையும் நிரூபித்தனர். அவர்கள் கதிரைகளுக்காகப் போட்டியிடவில்லை, கருத்துக்காகப் போட்டியிட்டது என்றுகூட இதனை உணரலாம்.

இப்பொழுதும் தமிழ் மக்கள் ஒரு கருத்துக்கு வாக்களிக்கும் வரலாற்றுக் கட்டாயம், போர் வெற்றிகளின் உச்சிப்படிகளில் நின்றவாறு எதிர்கொள்ளப்பட்டுள்ளது. போர்ரீதியிலும், ஜனநாயகம் என்று சொல்லப்படும் முறையிலும் தமிழ் மக்கள் தம் உரிமைகளுக்கான கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பே இந்தத் தேர்தலாகும். இதற்காகவே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்கள் முழுமையாக வாக்களித்தால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்னமும் பலமடையும் என யோசித்து, வாக்களிப்போர் எண்ணிக்கையைக் குறைக்க படையரணுள் வாக்களிப்பு என்ற முறையை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி சந்திரிகா - பாதுகாப்பு அமைச்சுமூலம் தேர்தல் ஆணையாளரை அழுத்தினார்.

தேர்தல் ஆணையாளரை அழுத்த சந்திரிகாவுக்கு இப்போது கிடைத்துள்ள ஆயுதம் பாதுகாப்பு அமைச்சே. விடுவிக்கப்படாத பகுதி என்ற பதத்தின்மூலம், பாதுகாப்பு அமைச்சைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்கள் முழுமையாக வாக்களிக்க வகைசெய்யமுடியாதவாறு அழுத்தங்கள் சந்திரிகாவினால் கொடுக்கப்படுகின்றன.

இருந்தும் தமிழ் மக்கள் தம் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டிய வரலாற்றுக் கட்டாயம் மறுக்கப்படமுடியாத விடயமாகும்.

எப்பொழுதும் தமிழ்விரோதக் குழுக்கள்-தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவையாகும். 1990 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுக்கு முன்வரை நடந்த தேர்தல்களில், தேசவிரோதிகள் அதிகளவில் நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றனர். இது தமிழ் மக்களால் வழங்கப்பட்ட வாக்குகளால் அல்ல, கள்ள வாக்குகளால் மட்டுமே இவை சாதிக்கப்பட்டன.

ஆனால் இம்முறை அது சாத்தியமல்ல. தேசவிரோதிகளுக்குச் சிறியளவுகூட இம்முறை தமிழ்மக்கள் இடமளிக்கமாட்டார்கள். தமக்கு வெற்றி கிட்டும் எனத் தேசவிரோதிகள் கனவு காண்கின்றனர்.

அனைவரும் வாக்களிக்கவேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் வாக்குகள் மட்டுமே போடப்பட முடியாது.

மற்றும்படி தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் தவறாது வாக்களித்து, தமது கருத்தினைத் தெரிவிக்கவேண்டும். சொந்த இடங்களைவிட்டு பிறஇடங்களில் வாழ்வோரும் இயன்றளவு சொந்த இடங்களுக்குச் சென்று வாக்களிக்கவேண்டும். வாக்களிக்கும் சகல சாத்தியப்பாடுகளையும் தமிழ் மக்கள் பயன்படுத்தவேண்டும்.

இது ஒரு வரலாற்றுக் கட்டாயமாக மாறிவிட்டது. ☆

# நம்பமுடியாத கற்பனை மிகுந்த படம் 11 விருதுகளை அள்ளிச்சென்றது



சிறந்த துணை நடிகை ரெனி செல்வேஜர்

(வாஷிங்டன்)

இந்தவருடத்துக்கான ஒஸ்கார் விருதுகளில் 11 விருதுகளை 'லோட் ஒவ் த றிங் - திரோன் ஒவ் த கிங்' என்ற அதீத கற்பனைகள் நிறைந்த படம் வென்றுள்ளது. பென்ஹர், டைட்டானிக் ஆகிய படங்களை அடுத்து 11 விருதுகளை அள்ளிச் சென்ற மூன்றாவது படம் இதுவாகும்.

நம்ப முடியாத கற்பனை மிகுந்த படம் ஒன்று ஒஸ்கார் விருதைப் பெற்றுக்கொண்டது. இதுவே முதற் தடவையாகும்.



ரிம் ரொபின்ஸ்

சிறந்த படம் மற்றும் சிறந்த இயக்குநா ஆகியவற்றுக்கான விருது 'பீற்றர் ஜக்சனுக்கு' வழங்கப்பட்டது.

சிறந்த இசையமைப்பு, சிறந்த பாடல், சிறந்த காட்சியமைப்பு, சிறந்த திரைக்கதை, சிறந்த படத்தொகுப்பு, சிறந்த ஒப்பனை, சிறந்த கலையமைப்பு, சிறந்த ஆடை அலங்காரம் மற்றும் சிறந்த ஒலிப் பதிவு ஆகியவற்றுக்கான விருதுகளை இந்தப் படம் தட்டிச் சென்றுள்ளது.

1960 களில் தயாரிக்கப்பட்ட 'பென்ஹர்' 1998இல் தயாரிக்கப்பட்ட டைட்டானிக் ஆகிய படங்களைப் போன்று வசூலிலும் இந்தப்படம் சாதனை படைத்துள்ளது. உலகம் முழுவதிலும் இருந்து 534 மில்லியன் பவுண்களை இந்தப்படம் வசூலாகப் பெற்றுள்ளது.

சிறந்த படத்துக்கான பரிசினைப் பெற்றுக்கொண்டபோது திரைப்படத்தை இயக்கிய ஜக்சன் இந்தப் படம் ஒஸ்கார் விருதினைப் பெற்றுள்ளதை என்னால் நம்பவே முடியாதுள்ளதாகத் தெரிவித்தார்.

'மிஸ்ரிக் றிவர்' என்ற திரைப்படத்தில் நடித்ததன் மூலம் சிறந்த நடிகராக 'சீன் பென் தேற்ர்' தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதேவேளை, 'மொன்ஷ்றர்' திரைப்படத்தில் தொடர் கொலைகளைப் புரிபவராக நடித்த 'சார்லிஸ் தெரோன்' சிறந்த நடிகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



இயக்குநர் பீற்றர் ஜக்சன்



சிறந்த நடிகர் சீன் பென் தேற்ர

# பஞ்சாப் முதல்வர் கொலையாளிகள்; பலூனில் தப்பிச் சென்றுள்ளனரா?

## இந்திய - பாகிஸ்தான் எல்லையில் பரபரப்பு

பலூனில் பறந்து, 3 மர்ம மனிதர்கள் பாகிஸ்தானுக்குத் தப்பிச்செனற சம்பவம் எல்லையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அவர்கள் பஞ்சாப் முன்னாள் முதலமைச்சரைக் கொலை செய்தவர்களா? என்று விசாரணை நடந்துவருகிறது.

பஞ்சாப் மாநிலத்தில் இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கிராமம் சன்கலான். கடந்த வியாழக்கிழமை அந்தப் பகுதியிலருந்து 3 மர்ம மனிதர்கள் பலூனில் பறந்துசென்று, பாகிஸ்தான் பகுதியில் ஏறத்தாழ 300 மீற்றர் தூரத்தில் தரையிறங்கினர்.

இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது. எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஜெகதீஸ் பரிஷத் என்பவர் இந்த காட்சியை நேரில் பார்த்திருக்கிறார். ஆனால், அவர் போதிய கல்வி அறிவு இல்லாதவர் என்பதால், மர்ம மனிதர்கள் பறந்து சென்றது பலூனிலா? அல்லது வேறு சாதனங்கள் மூலமா? என்பதை தெளிவாக அடையாளம் சொல்ல முடியவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து தேவையான விபரங்களை கொடுக்கும்படி எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் - பாகிஸ்தானுக்கு ஏற்கனவே தகவல் கொடுத்துள்ளனர்.

இந்திய எல்லைப் பகுதி பொலிஸ் நிலையத்திலும் இதையொட்டி பல்வேறு குற்றப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த மர்ம மனிதர்கள் புரெயில் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்று பஞ்சாப் முன்னாள் முதலமைச்சர் பியாந்த்சிங்கை கொலை செய்தவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தீவிர விசாரணை நடந்து வருவதாக, எல்லைப் பாதுகாப்புப் படை கட்டளை அதிகாரி தர்பாராசிங் கூறினார்.

# இந்தோனேஷியாவில் டெங்கு 300 பேர் பலி; பலர் பாதிப்பு!

இந்தோனேஷியாவில் டெங்குக்காய்ச்சல் வேகமாகப் பரவிவருகிறது.

கார்த்தா, ஜாவா உட்பட பல்வேறு நகரங்களில் இதுவரை டெங்குக் காய்ச்சலுக்கு 300 பேர் பலியாகிவிட்டனர். நாடு முழுவதும் 25 ஆயிரம் பேர் இதனால் பாதிக்கப்பட்டு பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.



இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் நாட்டில் மீசல்ஸ் என்ற ஒருவித அம்மை நோய் பரவிவருகிறது. இதையடுத்து, நாடு முழுவதும் இலவச அம்மை நோய்த் தடுப்பூசி போடப்பட்டுவருகிறது.

# இஸ்ரேல் எறிகணை வீச்சு மூவர் பலி; ஏழு பேர் காயம்

காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். 7 பேர் வரையில் காணமடைந்துள்ளனர்.

காஸாவிலிருந்து ஜபாலியா அகதிகள் முகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த காரொன்றின் மீதே இந்த எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரான 'அமீன் டாகு' என்பவர் இஸ்லாமிய ஜிகாத் அமைப்பின் அங்கத்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்லாமிய ஜிகாத் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு, அண்மைக் காலமாக அதிகளவான ஹெலிகொப்ரர்களை இஸ்ரேலியப் படையினர் பாவித்து வருகின்றனர்.

கொல்லப்பட்டவர்களில் 14 வயதுடைய சிறுவன் ஒருவனும் அடங்கியுள்ளான். மற்றவர்களின் உடல் அடையாளங்காண முடியாத அளவிற்குச் சிதறிக் காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காயப்பட்டவர்களில் - 3 சிறுவர்



களில் ஒரு சிறுமி ஆபத்தான நிலையிலுள்ளதாக வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துக்கு பதில் தாக்குதல் நடத்தப்போவதாகத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட மக்களை, பலஸ்தீனப் பாதுகாப்புப் படையினர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தனர்.

# சர்வதேசப் படை ஹெயிட்டியில் பணியாற்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை அங்கீகாரம்

ஹெயிட்டி ஜனாதிபதியின் வெளியேற்றத்தை தொடர்ந்து ஏற்பட்டுள்ள மோசமான நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் 15 அங்கத்தவர்கள், சர்வதேச படையைக் ஹெயிட்டியில் பணியாற்றுவதற்கான அங்கீகாரத்தை ஏகமனதாக வழங்கியுள்ளனர்.



ஹெயிட்டியில் சட்ட ஒழுங்குகள் நிலைநிறுத்தப்படும்வரை அங்கு கடமையாற்றுவதற்கு படையினருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

சிறு தொகையான அமெரிக்க கடற்படையினரும் அங்கு பணியாற்றுவதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். விரைவில் கனடா, பிரெஞ்சு ஆகிய நாடுகளின் படையினர், ஹெயிட்டிக்கு செல்லவுள்ளன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஐக்கிய நாடுகளின் செயலர் கோபி அனான். ஹெயிட்டி மக்களை உலகம் மறந்துவிடவில்லை எனக் குறிப்பிட்டார்.

இதனிடையே, ஹெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதி 'ஜின் பேட்ராண்ட் அரிஷ்ரைட்' மத்திய ஆபிரிக்க குடியரசொன்றிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தப்பிச்சென்றுள்ளார்.

அரிஷ்ரைட் தென் ஆபிரிக்காவில் அரசியல் தஞ்சம் கோருவதற்கு திட்டமிட்டுள்ளார். ஆனால், தென் ஆபிரிக்கா அரிஷ்ரைட்டுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவது தொடர்பாக இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை.

பனாமாவின் ஜனாதிபதி 'மிரேயா மொஷ் கோசோ' அமெரிக்காவின் வேண்டுதலிற்கிணங்கி அரிஷ்டைட்டுக்கு தஞ்சம் கொடுக்கவுள்ளதாக முன்னர் தெரிவித்தார்.

அதேவேளை, கொஷ்தரிக்கர் ஜனாதிபதிக்கு தஞ்சம் கொடுப்பதற்கு இணங்கியிருந்தது. ஆனால், ஆபிரிக்கா செல்வதையே விரும்புவதாக அரிஷ்டைட் தெரிவித்திருந்தார்.

ஹெயிட்டியிலிருந்து வெளியேறு முன்னர் கருத்துத் தெரிவித்த ஹெயிட்டியின் ஜனாதிபதி அரிஷ்டைட் ஹெயிட்டியில் இரத்தக்களரி ஒன்றை தடுப்பதற்காக பதவி விலகுவதாகத் தெரிவித்தார்.

இதனிடையே, ஹெயிட்டியின் உயர்நீதிமன்ற நீதிபதியான 'பொனிபேஷ் அலெக்சாண்டர்' அந்த நாட்டின் அரசியல் அமைப்பில் தெரிவிக்கப்பட்டவாறு காபந்து அரசின் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி அரிஷ்டைட் ஹெயிட்டியிலிருந்து இரண்டாவது தடவையாக வெளியேற்றப்பட்டுள்ளார். 1991 ஆம் ஆண்டில் சதிப்புரட்சி ஒன்றின் மூலம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார். மூன்று ஆண்டுகளின் பின் அமெரிக்கப் படையின் உதவியுடன் மீண்டும் ஹெயிட்டியின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


**உடன் தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் போன் சொப் (Phone shop) நிலையத்தில் கடமையாற்றுவதற்கு விற்பனையாளரும், உதவி விற்பனையாளரும் (பெண்கள் மட்டும்) உடன் தேவை.

தொடர்புகளுக்கு:-
டயலொக் போன் சொப்
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

(சி/2269)

**றோமன் கத்தோலிக்க மாணவர் நன்மை கருதி**

1 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டுவரை விவிலிய வெளியீடான ஞான உபதேச புத்தகம் விற்பனைக்கு உண்டு

1 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆம் ஆண்டுவரை - 20/-
7 ஆம் ஆண்டிலிருந்து 9 ஆம் ஆண்டுவரை - 30/-
10 ஆம் ஆண்டிலிருந்து 12 ஆம் ஆண்டுவரை - 33/-
A/L - 60/-
பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்
சேர்ந்த பைபிள் - 285/-

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021222 5542

(சி-2264)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

அர்ஜுன், சிம்ரன் நடித்த

**ஒற்றன்**

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

**BLOOD SPORT - 2**

(சி-2262)

**ராஜா யாழ்ப்பாணம்.**

தனுஷ், அபர்ணா, கருணாஸ் நடித்த



**புதுக்கோட்டையிலிருந்து சரவணன்**

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி/2263)



**வீடு விற்பனைக்கு உண்டு**

சுதுமலையில் மாடிவீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன், கீழே குறிப்பிடும் நேரத்தில் தொடர்புகொண்டு மேலதிக விபரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல :
**416 - 497 - 2867 (கனடா)**

இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணியில் இருந்து காலை 9 மணிக்குள் தொடர்புகொள்ளவும்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நலன்புரி நிலையத்திலிருந்து வெளியேறுமாறு பொலிஸார் எம்மை அச்சுறுத்தி வருகின்றனர்

## யுன்.என்.எச்.சி.ஆரில், அகதிகள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் முகுந்தன் நலன்புரி நிலையத்தில் 14 வருடங்களாக தங்கியிருக்கும் குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் அச்சுறுத்தி வருவதாக அங்குவசிக்கும் குடும்பங்கள், அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளன.

1989ஆம் ஆண்டுமுதல் மாவிட்டபுரம், தெல்லிப்பழை, காங்கேசன்துறை முதலான பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்த 15 குடும்பங்கள் இந்த முகாமில் வசித்து வருகின்றனர்.

இந்தமக்கள் வசித்துவரும் முகுந்தன் முகாம் அமைந்துள்ள அந்த இடத்தின் உரிமையாளர் ஒருவர் தற்போது வெளிநாட்டிலிருந்து வந்து அந்த இடம் தனக்கு வேண்டுமெனத்தெரிவித்துள்ளார். அத்தோடு ஒருமாத தவணையில் அவ்விடத்திலுள்ள மக்கள் வேறு இடங்களுக்குச் செல்லவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அந்த இடத்தின் உரிமையாளரோடு அங்குவந்த பொலிஸார் பொதுமக்களை அச்சுறுத்தியதுடன் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அந்த இடத்திலிருந்து அகலாவிட்டால் குடியிருப்பிலுள்ள மக்களை கட்டாயமாக அகற்றவேண்டி ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளன.

சொந்த இடங்களை உயர் பாதுகாப்பு வலயத்துள் இழந்தநிலையிலும், எந்தவித வருமானமும் இல்லாத நிலையிலும் கஷ்டப்பட்டு வரும் அந்தமக்கள் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்ததுடன், 14 வருடங்களின்பின் வந்துநின்று தம்மை அச்சுறுத்தும் செயல் மனித உரிமையை மீறும் செயல் எனத்தெரிவித்து யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகராலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

# வெளிவாரிப் பரீட்சை இம்மாதம் 15 இல் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைகளான கலைமாணி பகுதி II, 2001, சிறப்புக் கலைமாணி பகுதி II 2001 இற்கான பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ். பலகலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைகளுக்கான நேர அட்டவணை மற்றும் பரீட்சை அனுமதி அட்டைகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்குப் பின் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாமென பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன், இந்தமுறை பரீட்சை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் நடத்தப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் ஜனநாயகத்தின் மறுதலிப்பு!

## மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்

இலங்கையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் ஜனநாயகத்தின் மறுதலிப்பு என - மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் நகரசபை மண்டபத்தில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் நேற்று முன்தினம் நடத்திய கருத்தரங்கில் கலநதுகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தச் சட்டம் காரணமாக மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 25 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில், தமிழர்கள் பல துன்பங்களைச் சந்தித்துள்ளனர்.

இந்தச்சட்டத்தின் மூலம் அப்பாவிகள் பலர் சிறையில் தள்ளப்பட்டுள்ளனர். எனவே இந்தச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

சிறையில் வாடும் அப்பாவித் தமிழ் மக்கள் 15 வருடங்களாகியும் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பது கவலைக்குரியது. ஏனைய குற்றவாளிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதே போன்று சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழ் மக்களும் பொதுமன்னிப்பின்கீழ விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் ஆயர் மேலும் குறிப்பிட்டார்.

# ஹெல உறுமயவின் தேர்தல் விஞ்ஞாபனம்

(கொழும்பு)

தேசிய ஹெல உறுமய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று கணடியில் வெளியிடவுள்ளதாக அந்தக்கட்சியின் அதியுயர்பீடபிர சித்தவை ஓமல்வே சோபித தேரர் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

அவர் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தாவது.

தமது கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் கட்சியுடன் நாடாளுமன்றத்தில் இணைந்து செயற்படவுள்ளதாகவும் தெரிவித்த அவர், எவருடனும் பாகுபாடு ஏற்படுத்தும் நோக்கத்துடன் தாம் இம்முறை தேர்தலில் ஈடுபடவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# தேர்தல் வன்முறைகள் 163 ஆக உயர்ந்துள்ளன!

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான தேர்தல் வன்முறைகளைச் சம்பவங்கள் 163 ஆக உயர்ந்துள்ளன.

இந்த தகவலை பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை 6.00 மணிமுதல் 24 மணித்தியாலம் வரை 16 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக பதிவாகியுள்ளது.

இவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன அதிகளவில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

நேற்றுக்காலை வரை நடைபெற்ற 14முறைப்பாடுகளில் 12 சம்பவங்கள் குற்றவியல் சட்டத்தை மீறியதாகவும், இரண்டு சம்பவங்கள் தேர்தல் சட்டத்தை மீறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்துடன் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்று வரை 163 முறைப்பாடுகள் பதிவாகியிருந்தன.

# சிகை அலங்கரிப்பாளர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல சிகை அலங்கரிப்பு சங்க உறுப்பினர்களுக்கு நாளை காலை 10.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம் கேட்டுள்ளது.

இன்றைய அரசியல் நிலை, ஒன்றியம அமைப்பது சம்பந்தமாக கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## இரு ஐ.தே.க....

யிடப் போவதில்லையெனத் தெரிவித்தவர்கள் ஆவர்.

இதில் பூபாலரத்தினம் சுயவிருப்பத்தின்பேரிலும், விநாயகமூர்த்தி சுகயீனம் காரணமாகவும், தேர்தலிலிருந்து விலகுவதாக தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

## புலிகளுடன்....

துடன், இதற்கு ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து விளக்கம் கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதற்கிடையில், தேர்தல் முடியும்வரை, இனவாதக் கருத்துக்களை மறைத்து, சமாதானம், பேச்சுவார்த்தை, புனரமைப்பு, மக்களாடசி போன்றவை குறித்து அதிகமாகப் பிரசாரம் செய்யும்படி, தனது கூட்டணியின் அங்கத்தவர்கள் அனைவரையும் ஜனாதிபதி சந்திரிகா, கடுமையாகப் பணித்துள்ளதாகவும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆட்சியைக் கைப்பற்றினால்...

படையில் நடாத்துவது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானிதிருக்கிறது. எனினும் விடுதலைப் புலிகளுடைய இடைக்கால நிர்வாக சபையோசனைகளை பேச்சுக்களுக்கான அடிப்படையாக தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தமக்குத் தெரிவித்தாகவும் அந்தச் செய்தி தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்னர், போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏதும்மாற்றம் செய்யவேண்டுமா என்பதுகுறித்தும் தாம் தீர்மானிக்கவேண்டியிருப்பதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் இவ்வாறு குழப்பமான நிலைப்பாடுகள் காணப்படுவது தொடர்பாக லக்ஷ்மன் கதிர்காமரிடம் கேட்கப்பட்டபோது - அது தொடர்பில் விரைவில் தாம் கலந்துரையாடி ஒரு முடிவு எடுக்கவுள்ளதாகவும், அதன் பின்னர், இருதரப்பு யோசனைகளும் மக்கள் முன்வைக்கப்பட்டு, மக்களுடைய தீர்மானத்துக்கு அவை விடப்படும்என்றும் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.தே.க...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தார்.

நேற்றுக்காலை 6 மணிக்கு நோயாளரைப் பார்வையிடுவது போல் வந்த இனந்தெரியாத இருவர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனை நடைபெற்றது.

இவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஷ் சமரதிவாகர தெரிவித்தார்.

## ஜனக பெரேரா...

வொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனை நாம் கண்டிப்பதோடு இதற்கு உடனடியாக சரியான நடவடிக்கையை மனித உரிமை அமைப்புக்கள் எடுக்கவேண்டும்.

செம்மணிப் புதைகுழிகள் குறித்த விசாரணைகள் பூரணமடையாமல் இழுபட்டுச்செல்கின்றன. இதற்கு சரியான ரீதியில் விசாரணைகள் நடததப்படுதல் வேண்டும்.

காணாமற்போன இளைஞர்கள் பற்றிய இறுதிமுடிவை வழங்கவேண்டும் இதற்கும் சரியான விசாரணைகள் இடம்பெறவேண்டும் எனத தெரிவித்தே அவர்கள் தமது போராட்டத்தை நேற்று நடத்தினர். (ப)

## ஐக்கிய முன்னணி...

மீளவும் போர்தொடங்கும் என்ற பீதி மக்கள் மத்தியில் உள்ளது. இது தேவையில்லாத அச்சம். இந்த முன்னணி ஆட்சிக்கு வந்தால் போர் நிறுத்த உடன்படிக்கை தொடரப்படும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மீளத்தொடங்கப்படும்.

அத்துடன், சமாதான முயற்சி தொடர்பாக எமது அயல்நாடான இந்தியா மற்றும் மேலைத்தேய நாடுகளுடன் ஆராயப்படும்.

இதுநாள்வரை நடந்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தாலும், அதில் சில மாற்றங்கள் கொண்டுவரப்படும். பிரதமர் ரணில் தனது சுயநலன்களை முன்னிறுத்திப் பேச்சுவார்த்தையை நடத்தியது மாதிரி நான் செயற்படமாட்டேன்.

அத்துடன் பொதுஜன முன்னணி கூட்டணிக்கும், தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டணிக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். இனப்பிரச்சினை தீர்வு விடயத்திலேயே இரண்டு முன்னணிக்கும் இடையில் வேறுபாடுள்ளது.

இவ்வாறு வேறுபாடு இருந்தாலும் ஒவ்வொரு இனத்தினுடைய அபிலாஷைகளை அறிந்து, அதற்கேற்ப தீர்வுகளை முன்வைக்க ஜே.வி.பியினருடன் நான் கதைத்ததால் அவர்களும் என்னுடன் இணைநதுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி நோர்வே மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்பாக முன்னர் கடைப்பிடித்துவந்த தனது கடுமையான நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்கி வந்துள்ளாரென ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

## கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்...

மதிக்கப்பட வேண்டும் என்பன போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று மாலை வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை யாழ்.மாவட்ட கூட்டமைப்பு தலைமை வேட்பாளர் மாவை.சேனாதிராசா வெளியிட்டார். இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டிருப்பதுடன் புலிகளின் தலைமையின் கீழ் ஒரே அணியில் ஒன்றுபட்டு உழைக்கவும் உறுதிபூண்டிருப்பதாகவும் -

தமிழ்த்தேசிய இனத்தின் கோரிக்கைகள் தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டு - நியாயபூர்வமான அரசியற்தீர்வு மறுக்கப்பட்டு இராணுவ ஆக்கிரமிப்பு அரச அடக்குமுறை மீண்டும் தொடருமாயின் - தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழர் தாயகத்தில் தமிழரின் இறைமையும் சுதந்திரம் நிலைநிறுத்தப்படுவது தவிர்க்க முடியாததாகவேவிடும் என்பதையும் வலியுறுத்தியுள்ளது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் மாவை.சேனாதிராசா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோ பொதுச் செயலாளர் இந்திரகுமார் பிரசன்னா, ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

(தேர்தல் விஞ்ஞாபனத்தின் முழு விபரமும் 2 ஆம் பக்கத்தில் உள்ளது)


# தேவை

1. அலுவலக செய்தியாளர் -
(அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
2. பயிற்சிப் பத்திரிகையாளர் -
(க.பொ.த.உயர்தரம் சித்தி)
3. ஒப்பு நோக்குநர் -
(அனுபவமுள்ளவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
க.பொ.த.உயர்தரம் சித்தியடைந்திருக்க வேண்டும் இரவிலும் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்)
4. பக்க வடிவமைப்பாளர் -
(அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
5. கணினி தட்டெழுத்தாளர் -
(தமிழில் வேகமாக ரைப் செய்யக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
6. பாதுகாப்பு உத்தியோகத்தர் -
(பாதுகாப்பு சேவையில் முன்அனுபவம்)
-மாநகர எல்லைக்குள் வசிக்க வேண்டும்.
-இரவிலும் கடமையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
-வயது 25 வயதிற்கும் 50 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வு 03.03.2004 புதன் காலை 10 மணிக்கு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றுப் பத்திரங்கள், கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.